விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 16 செவ்வாய்க்கிழமை (01.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256




# ஜனாதிபதி-தமிழ்க் கூட்டமைப்பு அடுத்தவாரம் சந்தித்துப் பேச்சு



## அரசியல் தீர்வுத்திட்டம் முக்கியம் பெறுமாம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30க்கு சந்திக்கவுள்ளதாக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இந்த சந்திப்பு இடம்பெறும் எனவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)



## போர் இல்லாத போதும் நாட்டைப் பிரிக்க சதி

### அஸ்கிரிய மகாநாயக்கர் எச்சரிக்கை

(கொழும்பு)

போர் இல்லாத சமயத்திலும் நாட்டைப் பிரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வண. உடுகம சிறி புத்தரகித்த தேரர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

நாட்டைப் (02 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் போர்க்குற்றங்களை அறிக்கை செய்கிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக படையினர் நடத்திய தாக்குதல்களின் போது இடம் பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து அமெரிக்காவின் போர்க் குற்றங்கள் தொடர்பான அலுவலகம் அறிக்கை ஒன்றைத்தயாரித்து வருகின்றது.

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அநேகமாக அந்த அறிக்கை வெளியிடப்படும் எனத் தெரிகிறது.

இறுதிப் போரின்போது 20 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கைகளை மேற்கோள்காட்டி லண்டனில் இருந்து வெளிவரும் ரைம்ஸ் நாளேடு செய்தி (02ஆம் பக்கம் பார்க்க)

## சனல்-4இன் வீடியோக் காட்சி ஐ.நா. செயலரின் கவனத்தை ஈர்க்க நோர்வே அரசாங்கம் முயற்சி!

(ஒஸ்லோ)

தமிழர்கள் படையினரால் படுகொலை செய்யப்படும் வீடியோக்காட்சி குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்கீமூனின் கவனத்தை நோர்வே ஈர்க்கவுள்ளது.

மூன்று நாடுகளுக்கான தனது சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக பான்கீமூன் நேற்று திங்கட்கிழமை ஒஸ்லோ சென்றார். அவரிடம் இந்த சம்பவம் குறித்துப்பேசப்படும் என நோர்வேயின் சுற்றுச்சூழல் மற்றும் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

இது குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் எதுவும் கருத்துத் தெரி (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த லிபியா விஜயம்

(கொழும்பு)

லிபியா குடியரசின் 40ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் முக்கிய நோக்கில் லிபியா தலைவர் முஹமர் அல் கடாபியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி அங்கு விஜயம் செய்துள்ளார்.

லிபியா தலைநகர் ரிப்பொலியில் உள்ள பச்சை சதுக்கத்தில் லிபிய சுதந்திரதின நிகழ்வுகள் இன்று (14ஆம் பக்கம் பார்க்க)

## சகல உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலை நடத்த வலியுறுத்தல்!

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்களையும் இந்த வருட இறுதிக்குள் நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுவிக்கப்போவதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தி ருக்கின்றார். யாழ். மாவட்ட மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் விரைவில் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

குடாநாட்டில் யாழ்.மாநகரசபைக்கான தேர்தல் அண்மையில் நடத்தப்பட்டது. இதனை விட மூன்று நகர சபைகளும் 14 பிரதேச சபைகளும் யாழ்ப்பாணத்தில் உள்ளன. 1998ஆம் ஆண்டில் இவற்று க்கான தேர்தல் இறுதியாக நடத்தப்பட்டது. (14ஆம் பக்கம் பார்க்க)

## 15 பல்கலைக்கழகங்களின் மேம்பாட்டுக்கு உலக வங்கி 1700 மில்லியன் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள 15 பல்கலைக்கழகங்களின் மேம்பாட்டிற்கு உலக வங்கி ஆயிரத்து 700 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்குவதாக உலக வங்கியின் தரமேம்பாட்டு (IRQ) இணைப்பாளர் பேராசிரியர் எல்.எல்.ரட்ணாயக்க தெரிவித்தார்.

உலக வங்கியினால் பல்கலைக் கழங்களின் தரமேம்பாடு என்ற தலைப்பின் யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே பேராசிரியர் ரட்ணாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் நௌகோஇஷி (14ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்துக்கு இருபது வருட கடூழிய சிறைத்தண்டனை

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்துக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இருபது வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. திஸ்ஸநாயகத்துக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் தொடரப்பட்டிருந்த வழக்கில் அவருக்கு எதிரான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் அவர் குற்றவாளியென மேல் நீதிமன்றம் தீர்மானித்தது

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் சட்டமா அதிபரினால் திஸ்ஸநாயகத்துக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. North Eastern என்ற மாதாந்த சஞ்சிகை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டமை, வெளியிடப்பட்டமை தொடர்பாக இனங்களுக்கிடையிலான உணர்வுகளை தூண்டி பொதுமக்கள் மத்தியில் கலவரம் ஏற்படும் வகையில் செயற்பட்டதாக பத்திரிகையாளர் திஸ்ஸநாயகத்துக்கு (14ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யூனியன் அஷ்யூரன்ஸின் 2ஆவது கிளை இன்று பருத்தித்துறையில் திறப்பு




(யாழ்ப்பாணம்)

யூனியன் அஷ்யூரன்ஸின் இரண்டாம் தர கிளை இன்று பருத்தித்துறையில் திறக்கப்படவுள்ளது.

ஸ்ரான்லி வீதியில் உள்ள அஷ்யூரன்ஸ் நிறுவன மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது இதுகுறித்து உத்தியோ கபூர்வமாக அறிவிக் கப்பட்டது. யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ். மண்ணில் காலடி பதித்ததில் இருந்து பல் வேறு காப்புறுதித் திட்டங்களை முன்வைத்து யாழ். மக்களுக்கு அளப்பரிய சேவையை ஆற்றிவருகின்றது. கடந்த 8 வருடகாலத்தில் வடக்கில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நிலைகளில் மாற்றம் காணப்பட்ட போதும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிலைதவறாது தனது சேவையை சிறப்பாக ஆற்றிவரு வதாக யாழ் .பிராந்திய பொது முகாமை யாளர் சி.என். மதிவதனன் தெரி வித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, யூனியன் அஷ்யூரன்ஸ் 2ஆம் தர கிளை பருத்தித் துறையில் இன்று ஆரம்பமாவது யாழ். குடாநாட்டு மக்களை புது யுகத்திற்கு இட்டுச் செல்வதாக அமையும்.

கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் பருத்தித்துறை வடமராட்சியின் தலை நகர மாக விளங்கக்கூடிய ஓர் நகரமாக திகழ்ந்தது. எனினும் கடந்த கால யுத்த சூழ்நிலைகள் காரணமாக சீர்குலைந்த நிலையில் காணப்பட்டதால் நெல்லியடி ஓர் வர்த்தக நகரமாக மாற்றமடைந்தது.

எனினும் தற்கால சூழ்நிலையில் பருத்தி த்துறை நகரம் மீளவும் புத்துயிர் பெற்று பொருளாதார நகரமாக மாற்றமடைந்து வருகின்றது. இந்நிலையில் யூனியன் அஷ் யூரன்ஸ் பருத்தித்துறையில் முதலா வதாக காலடி வைப்பதுடன் வடமராட்சி மக்களின் பொருளாதார வாழ்வாதார, கல்வி அபிவிருத் திக்கு முன்னின்று செயலாற்றவுள்ளது.

இது மாத்திமன்றி யாழ். குடாநாட்டு மக்களின் சமூக சேவை அபிவிருத்திக்கு முதன்மையளித்து வருவதுடன் பல்வேறு திட்டங்களையும் முன்வைத்துள்ளது. இதன் முதற்கட்டமாக இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் எல்லை களுக்கான பதாகைகளை சம்பிரதாய பூர்வ மாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்றார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டின் போது தலைமைப்பீட பிரதம நிறைவேற்றதிகாரி மரினா தர்மரட்ணம், பிரதி நிறைவேற்றதிகாரி டேக்பெரேரா ,வியாபார பொதுமுகாமை யாளர் ருக்மல் வீரரட்ண, பிரதிபொது முகாமை யாளர் நிகால் கத்துங்கே, பிரதி பொது முகாமையாளர் நாலக்கா தர்மரட்ண ஆகி யோர் கலந்து கொண்டனர். (ச-7)

# பெண்ணின் சடலம் உரும்பிராயில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களாக காணாமல் போயி ருந்த பெண் நேற்றுக் காலை உரும்பிராய்ப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஊரெழு ஈவினையைச் சேர்ந்த மகேந்திரன் ஜெயந்தினி (வயது21) என்பவரே நேற்று சடல மாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை வீதி வழியாகச் சென்ற பொதுமக்கள் தெரிவித்த தகவலின் அடிப்ப டையில் இவரது சடலம் பொலிஸாரினால் மீட்க ப்பட்டுள்ளது. அடையாளம் காண்பதற்காகவும் பிரேத பரிசோதனை நடத்தவும் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இவர் காணாமல் போன சம்பவம் தொடர்பான சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. (ச-5)

# உரும்பிராய் இந்துவின் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசியர்க ளுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெற உள்ளதாக அதிபர் ம.ஈஸ்வரநாதன் அறிவித் துள்ளார்.

ஆசிரியர்களின் தேவைகள் ,குறைபாடுகள் போன்ற தகவல்களை பெற்றுக் கொள்வ தற்காக இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதால் அனைத்து ஆசிரியர் களையும் தவறாது சமுகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (ச)

# இலங்கை வங்கியின் கொக்குவில் கருமபீடம் நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் கொக்குவில் கருமபீடம் ஆரம்ப நிகழ்வு நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு முதன்மை விருந்தினர் இலங்கை வங்கியின் வடமா காண செயற்பாட்டு முகாமையாளர் க. ஜெயேந்திராவினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் மற்றும் விசேட விருந்தினராக வடமாகாண இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் வீ.சி. சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச-3)

# அத்தியாவசிப் பொருட்களை யூ.என்.எச்.சீ.ஆர். வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து வவுனியா மற்றும் யாழ்ப் பாணம் நலன்புரி முகாம்களில் தங்கவைக் கப்பட்டு மீளகுடியமர்த்தப்பட்ட மக்களில் நல்லூர் பிரதேச செயலகப்பிரிவிற்குள் குடியமர்ந்த மக்களிற்கான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொருட்கள் யு.என். எச்.சி.ஆர். நிறுவன அனுசரணையுடன் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-14,30)

# சுன்னாகம் நகரப்பகுதியில் கடை உடைத்துத்திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் நகரப்பகுதியில் உள்ள வர்த்த கநிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கி ருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டு ள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இடம் பெற்ற இச் சம்பவம் ஒரு வாரத்தில் நிகழ்ந்த இரண்டாவது திருட்டுச் சம்பவம் எனத் தெரிவிக்கப்பட்டது. நள்ளிரவு வேளை கடை உடைக்கப்பட்டு சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பால்மா வகைகள், பிஸ்கட்டுக்கள் உட்பட்ட பொருட்களே திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சுன்னாக நகரப் பகுதியில் இடம் பெற் றுள்ள இந்த இரண்டாவது கடை உடைப்பு சம்பவத்தினால் அப் பகுதியில் உள்ள வர்த்த கர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளார்கள். இந்த திருட்டுச் சம்பவம் சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளரினால் முறையிடப்பட்டுள்ள துடன் சுன்னாகம் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளார்கள். (ச-5)

# சிறுத்தைகள் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கிழக்கிலுள்ள வயல் ஒன்றினுள் புகுந்த சிறுத்தைப் புலிகள் அங்கு நின்ற 6 ஆடுகளைக் கடித்துக் காயப்படுத்தியுள்ளன.

நேற்று முன்தினம் மாலை வேளை வயலுக்குள் வந்த சிறுத்தை புலிகள் ,மேய் ந்து கொண்டிருந்த ஆடுகளுக்கு கடித்து காயப்படுத்தி அட்டகாசம் புரிந்து விட்டு தப்பிச் சென்றுள்ளன.

(ச-30)

# ஷெல், லாப் காஸின் விலைகள் அதிகரிப்பு

காஸ் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஷெல் காஸ் 103 ரூபாயினாலும் லாப் காஸ் 69 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அந்த நிறுவன ங்கள் அறிவித்துள்ளன.

இதனடிப்படையில் ஷெல் காஸ் சிலிண்டர் ஒன்றின் புதிய விலை ஆயிரத்து 550 ரூபா என்றும் இந்த அதிகரிப்பு நள்ளிரவு முதல் அமுலுக்கு வருவதாகவும் ஷெல் காஸ் நிறுவ னத்தின் தலைவர் வேஹகபிட்டிய தெரிவித் துள்ளார்.

இதேவேளை லாப் காஸ் சிலிண்டர் ஒன்றின் புதிய விலை ஆயிரத்து 476 ரூபா என அந்நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளர் ரிமோய்ன் சல்டின் தெரிவித்தார்.

இறுதியாக கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி காஸ் சிலிண்டர்களின் விலை நிர்ண யத்தின் அடிப்படையில் ஷெல் காஸ் 53 ரூபாயினால் குறைவடைந்த அதே வேளை லாப் காஸின் விலை 100 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். (ச-3, 5)

**வாரம் ஒரு செய்தி**

வாராவாரம் வேதாகம அடிப் படையிலான தேவ செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஆர்வ முள்ளவர்கள் கேட்டு எழுதினால் இலவசமாக அனுப்பிவைக் கப்படும். கிறிஸ்தவம் சம்பந் தமான ஆலோசனைகள், கேள் விகள் கூட கேட்டுப்பெற்றுக் கொள் ளலாம்.

எழுத வேண்டிய முகவரி:
S.G .M.
27, சேமக்காலை வீதி,
நாவாந்துறை.

(3301)

**மீண்டும் வந்துவிட்டது**

**மில்க்வைற் நீலசோப்**

மில்க்வைற் தொழிலகம்
த. பெ. இல 77
யாழ்ப்பாணம்.

(3352)

**45- ம் நாள் நினைவஞ்சலி**



**அமரர் சுப்பையா மாரிமுத்து**

தோற்றம் 11-06-1921 மறைவு 19-07-2009

கடந்த 19.07.2009 அன்று சிவபதமடைந்த **சுப்பையா மாரிமுத்து** அவர்களின் 45 - ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 60, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

- குடும்பத்தினர்

(இ)

# போர் இல்லாத...

பிரிப் பதற்கு சில குழுக்கள் மேற்கொண்ட முயற்சிகள் அரசால் வெற்றிகரமாக முறி யடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் நாட்டைத் துண் டாடுவதற்கான மற்றொரு முயற்சி மேற் கொள்ளப்படுகிறது என்றார் தேரர்.

நிவித்திகலவில் அமைந்துள்ள உடகரவித்த விசிபத்தானராம விகாரையில் நடை பெற்ற சமய நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

30 ஆண்டு காலப்போர் நாட்டைப் பிரி வினையை நோக்கி அழைத்துச் சென்ற தாக கூறிய அவர் ,ஆனால் தமிழர் களில் ஒரு பகு தியினர் மட்டுமே அந்த முயற்சியில் ஈடுபட் டதா கவும் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற் றிய சிறி ஜெயவர்த் தன புர பல்கலைக்கழக துணை வேந்தர் வண. பெலன் வில விமலரத்ன தேரர் தெரி விக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ மற்றும் படையினர் மேற்கொண்ட நடவடிக்கை களினால் நாடு இன்று விடுதலை பெற்றுள் ளது என்றார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த் துவதில் தாமதங்கள் ஏற்படுவதற் காகக் பெருமளவு குற்றச் சாட்டுகள் சுமத்தப்படு கின்ற போதும் பெருமளவு நிதியை செலவிட்டு அவர்களுக்கு தேவையான அனைத்தையும் அரசு மேற்கொண்டு வருகின் றது. போரின்போது நாட்டின் மதிப்பைக் குலைக் கும் பல முயற்சிகள் மேற் கொள் ளப் பட்டன என அவர் சுட்டிக் காட்டினார். (ச-5)

# இலங்கையின்...

வெளியிட்டிருந்தது.

கண்களும் கைகளும் கட்டப்பட்டு, ஆடை கள் களையப்பட்டு தமிழ்க் கைதிகள் சிங் களப் படையினரால் சுட்டுக்கொல்லப்படும் வீடியோக்காட்சிகள் அண்மையில் பிரித்தா னியாவின் சனல்-4 நிறுவனத்தால் வெளியிடப் பட்டிருந்தது.

இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடக வியலாளர்கள் அமைப்பு இந்த வீடி யோக் காட்சிகள் வழங்கியிருந்தது.

இவை அனைத்தும் சிங்களப் படையி னரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங் கள் மற்றும் மனித உரிமை மீறல்கள்களுக் கான உறுதியான சான்று ஆதாரங்களாக சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய் வதற் காக கடந்த மே மாதம் 26,27 ஆம் திகதிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்புக் கூட் டத்தொடர் கூட்டப்பட்டது.

எனினும் இதில் இலங்கைக்கு எதிராக எந்தவித தீர்மானங்களும் நிறைவேற்றப்பட வில்லை. இந்தியா, சீனா, ரஷியா ஆகிய பலம் வாய்ந்த நாடுகளின் துணையுடன் தனக்கு எதிரான முயற்சியை கொழும்பு வெற்றிகர மாக தடுத்திருந்தது.

போரின் கடைசிக் காலப்பகுதியில் படை யினர் மற்றும் விடுதலைப்புலிகளால் பெரு மளவில் மனித உரிமை மீறல்கள் மேற்கொள் ளப்பட்டன எனக் குற்றம் சாட்டிய 90 அனைத் துலக மனித உரிமை அமைப்புக்கள் இந்தக் கூட்டத்தொடருக்கு அழைப்பு விடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிலையிலேயே இலங்கை யில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க போர்க்குற்றங்கள் தொடர்பான அலுவலகம் அறிக்கை தயாரித்து வருகின் றது.

இந்த அறிக்கையில் இறுதிப் போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்த பல தகவல்கள் வெளியா கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## கவிஞர் யார்? பண்டிதர் யார்?

சமஸ்கிருதத்தில் மகா கவியாக விளங்கியவர் பவபூதி. அவர் மிகப்பெரிய அறிஞர் பக்திமான்.

அவரது அறிவையும் பக்தியையும் கண்டு சரஸ்வதி தேவியே ஒரு சிறுமியின் வடிவில் வந்து அவருக்குப் பணிவிடை செய்து வந்தாள் என்று சொல்லப்படுகிறது இதிலிருந்தே பவபூதியின் பக்தியின் சிறப்பை நாம் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

ஒருநாள் பவபூதியைப் பார்ப்பதற்கு காளிதாசனும், தண்டியடிகளும் பவபூதியின் வீட்டுக்குச் சென்றார்கள். இவர்கள் வந்த சமயத்தில் பவபூதி பூஜையில் ஈடுபட்டிருந்தார். வாசலில் அந்தச் சிறுமி மட்டும் நின்றிருந்தாள்.

இவர்களைப் பார்த்ததும் அவள் அவர்களை வரவேற்று, "வாருங்கள்! சிறிது நேரம் இப்படி உட்காருங்கள். அவர் பூஜையில் இருக்கிறார். இப்போதுவந்துவிடுவார்!" என்றாள். "சரி!" என்றுசொல்லி இருவரும் அங்கு அமர்ந்தார்கள்.

தண்டியடிகள் அச்சிறுமியைப் பார்த்து, "பூரண சந்திரன் போன்ற முகத்தை உடையவளே! கொஞ்சம் பாக்குத்தூள் கொண்டுவா! (பூக்க சூர்ண மானியதாம் பூர்ண சந்திர நிமானனே)" என்றார்.

அடுத்ததாக காளிதாசன் "காதளவு நீண்ட கண்களை உடைய பெண்ணே! பொன்னிறமான வெற்றிலையும் எடுத்துவா! (ஸ்வர்ண வர்ணபர்ணம் கர்ணாந்தாய லோசனே)" என்றார்.

இவர்கள் சொன்னதைக் கேட்ட சிறுமி, "சரி" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள். வெற்றிலை பாக்கு எடுத்துக் கொண்டு வந்த அவளை, பூஜை முடிந்து வந்த பவபூதி பார்த்தார். "யாருக்கம்மா வெற்றிலை பாக்கு?" என்றார்.

அதற்கு அவள், "கவிஞராகிய காளிதாசருக்கும் பண்டிதராகிய தண்டியடிகளுக்கும் எடுத்துக் கொண்டு போகிறேன். (கவியே காளிதாசாய பண்டிதயா தண்டினே) என்றாள். அவள் கூறியதைக் கேட்ட பவபூதி அசந்து போனார்.

"அது சரியம்மா! காளிதாசரைக் கவிஞரென்றும் தண்டியடிகளைப் பண்டிதர் என்றும் சொல்கிறாயே! ஏன் அப்படி? என்று கேட்டார். அதற்கு அச்சிறுமி பின்வருமாறு விளக்கம் கொடுத்தாள்.

"காளிதாசர் என்னை "காதளவு நீண்ட கண்களை உடையவளே! என்று வர்ணித்தார். உனக்கு நீண்ட கண்கள் இருக்கின்றன ; அதைக் கொண்டு பொன்னிறமான வெற்றிலையைத் தேடி எடுத்து வா! என்று சொன்னார். பயனற்ற வர்ணனை எதுவுமில்லாமல் காரண காரியத்திற்கு ஏற்றாற்போல் பயன்படுத்துபவன் தான் கவிஞன்'' ஆனால் காரண காரியம் பார்க்காமல் வெறும் வர்ணனையைக் கையாள்பவன் பண்டிதன்.

"தண்டியடிகள் பாக்குத்தூள் கேட்டார். என்னை பூரண சந்திரன் போன்ற முகத்தையுடையவளே! என்று வர்ணித்தார். இந்த வர்ணனைக்கும் பாக்குத்தூள் கொண்டு வருவதற்கும் ஒரு தொடர்புமில்லை. இது வெறும் சொல் அலங்காரந்தான். பண்டிதர்கள் தான் பொருளைப் பற்றிய கருத்து இல்லாமல் அணிகளைப் பயன்படுத்துவதில் விருப்பம் கொண்டவர்கள்.

"எனவே தான் காளிதாசரைக் கவிஞர் என்றும், தண்டியடிகளைப் பண்டிதர் என்றும் குறிப்பிட்டேன்'' என்று சொல்லி முடித்தாள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள் டிசம்பர் மாதம் விநியோகிக்கப்படும்

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான பாடசாலைப் பாடப்புத்தக விநியோகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை நாடெங்கிலும் உள்ள ஆயிரத்து 24 டிப்போக்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை வடபகுதிக்கான பாடப்புத்தகங்கள் ஏ-9 வீதியூடாக அனுப்பி வைக்கப்படும் என கல்வி வலயத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வமாக இந்தப் பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு டிசம்பர் மாதம் 7ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

அரசாங்கம் அடுத்த ஆண்டிற்கான 3 இலட்சம் பாடப்புத்த கங்களை அச்சிடுவதற்கென 2.7 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது. 34 வகையான பாடப்புத்தகங்கள் புதிதாக அச்சிடப்பட்டுள்ளன.

இரு பிரிவுகளாக 240க்கும் கூடுதலான பக்கங்களைக் கொண்ட பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். (ஓ-4)

## மனித உரிமை பாதுகாவலர் பயிற்சிநெறி

யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டத்தின் மூலம் நடாத்தப்பட்டு வருகின்ற மனித உரிமை பாதுகாவலர் பயிற்சி நெறியின் எட்டாவது பாகம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற் பகல் 4.30 மணி வரை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரியின் பட்டதாரி மேற்பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி யினை மேற்கொள்கின்ற மாணவர்கள் அனைவரையும் உரியநேரத் திற்கு சமுகம் தரும்படி திட்ட உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஓ-30)

## மல்ரி மீடியா கற்கை நெறிக்கான நேரடி அனுமதிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

B.sc in Multimedia கற்கை நெறியானது மல்டிமீடியா துறையில் ஒரு வருடம் பட்டப்படிப்பினை யாழ்ப்பாணத்தில் கற்று 2 ஆம் , 3 ஆம் வருடங்களை வெளிநாட்டு முன்னணி பல்கலைக்கழகங்களில் பகுதி நேர வேலைவாய்ப்புடன் தொடரக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

மேற்படி கற்கை நெறிக்கான நேரடி அனுமதிகள் யாழ்ப்பாணம் வருகை தரும் லண்டன் நோட்டிங்காம் கல்லூரி பணிப்பாளரால் எதிர் வரும் 4 ஆம் ,5ஆம் திகதிகளில் காலை 9.30 முதல் பிற்பகல் 4.30 வரை நோர்த்லங்கா IIT யாழ் . நிறுவனத்திலும் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 10 மணி முதல் 4 மணி வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

மாணவர்கள் இவ் அரிய சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

## புதிய காட்சிச்சாலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வரையறுக்கப்பட்ட டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்கக் கம்பனியின் புதிய காட்சிச்சாலை இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.15 மணிக்கு 214 ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (6)

## தொழிற்பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராம அபி விருத்தி திணைக்களத்தினால் பற்றிக் பிறிண்டிங் மற்றும் அலுமினியம் பொருத்துகை ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இளைஞர், யுவதிகளின் சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் 40 தொடக்கம் 50 வரையான பயிற்சியாளர்களுக்கு இப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றது. (6-30)

## தொடர் விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பரண விஞ்ஞான சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் கருத்தரங்குத் தொடரில் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரை ஆய்வுக் கட்டுரை எழுதுதல் தொடர்பான விரிவுரை இடம் பெறவுள்ளது.

இவ் விரிவுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.சரவணபவ ஐயர் நிகழ்த்தவுள்ளார்.

இதில் இளம் ஆய்வாளர்கள் கலந்து பயன்பெறுமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்க D பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர். (6)

## க.பொ.த. உயர்தர செய்முறைப் பரீட்சை பரீட்சகர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு மனைப்பொருளியல், விஞ்ஞானம், நடனம் (பரதம்), சங்கீதம் (கர்நாடகம்) ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களை பரீட்சகர்களாகத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அதனைப்பூர்த்தி செய்து பரீட்சை ஆணையாளர் நாயகம் , பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்புக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்த, பத்தர முல்ல என்னும் முக வரிக்கு இம் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-6)

## இராசி பலன்

01.09.2009

(ஆவணி 16, செவ்வாய்க்கிழமை)

துவாதசி பிற்பகல் 4.36 மணிவரை

உத்தராடம் முன்னிரவு 7.09 மணிவரை

இராகுகாலம் 3.05-4.35 மணிவரை

சுபநேரம் 10.35-12.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அதிகபிரயாசை, அதிகாரம், பிறர் உதவி, காரிய அனுகூலம். |
| இடபம் | கட்டுப்பாடு, ரோகபயம், பெரியோர் சந்திப்பு, தனவிரயம். |
| மிதுனம் | எதிர்பாராத பகை, காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, வாகன பயம். |
| கடகம் | சௌக்கிய விருத்தி, அபூர்வ சந்திப்பு, முயற்சி கைகூடும், நல்ல செய்தி. |
| சிங்கம் | உடல் நலம், சுவாரஸ்யம், தொழில் விருத்தி, சத்துருஜெயம். |
| கன்னி | சிறுவியாதி, வியாபார நன்மை, முயற்சி கைகூடும், தனவருவாய். |
| துலாம் | மனச்சஞ்சலம், புதிய முயற்சி, சுபசெலவு, உடல் நலக்குறைவு. |
| விருச்சிகம் | கூட்டுமுயற்சி, தனவருவாய், சகோதரர் உதவி, பிரயாண நன்மை. |
| தனுசு | குடும்ப சுகம், வாக்கு மேன்மை, மாதர் நட்பு, முயற்சி தாமதம். |
| மகரம் | தேகநலன், சிந்தனை மிகுதி, பெரியோர் மனஸ்தாபம், நல்ல முயற்சி. |
| கும்பம் | காரிய அலைச்சல், சுபசெலவு, மனச்சஞ்சலம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | காரிய நன்மை, பொருள் சேர்க்கை, கலந்துரையாடல், போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 90 | 100 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 |
| தக்காளி | 10 | 20 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 100 | 110 | 80 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 20 | 20 | 30 |
| வாழைக்காய் | 20 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40 |
| பெரிய வெங்காயம் | 40-80 | 100 | 60 |
| பாகற்காய் | 30 | 50 | 40 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 30 | 40 | 30 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 40 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 110 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 15 |
| தேசிக்காய் | 80 | 100 | 85 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25 |

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை காலை இடம்பெறவுள்ளது.

காலை இடம் பெறும் விசேட பூசைகளைத் தொடர்ந்து சுவாமி 9 மணியளவில் தேருக்கு வருகை தந்து வீதியுலா வரும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஓ)

## மணவாளக் கோல உற்சவம்

(பொன்னாலை)

அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ் தான கும்பாபிஷேகத் தின மணவாளக் கோல நவோத்தர சகஸ்ர (1008) மஹா சங்காபி ஷேகம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி யாக பூசைகள் நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 8 மணிக்கு திரவிய அபிஷேகம் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு மஹா சங்காபிஷே கமும் நண்பகல் 12 மணிக்கு பூஜையும் இடம் பெறவுள்ளன.

அத்துடன் தேவஸ்தான வளாகத்தில் புதித்தாக அமைக்கப்பட்டுள்ள அன்னதான மண்டபத் திறப்புவிழாவும் பிற்பகல் விநாயகப் பெருமான் மின்னொளி தீபங்கள் அலங் கரிக்கப்பட்ட அழகிய பூந்தண்டிகையில் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். (ஓ-49)

## தெய்வீகத் தொடர் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கந்தர்மடம் மணல்தறை வீதி அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று செவ் வாய்க்கிழமை பகல் 10.30 மணிக்கு ஆரம்ப மாகித் தொடர்ந்து பதின்மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 5 மணிமுதல் 6 மணிவரை. தெய்வீகத் தொடர் பேருரைகளை மதுரகவி காரை எம்.பி. அருளா னந்தன் வழங்கவுள்ளார். (ஓ)

## சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்த வாகன சாரதி கள் உரிய ஆவணங்களுடன் வருகைதருமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்த னன் கேட்டுக்கொள்கின்றார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் 2008 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் மோட்டார் வாகன உடமை மாற்றம் மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியனவற்றைப் பெறுவ தற்கு விண்ணப்பித்திருந்தும் இதுவரை கால மும் மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கிடைக்கப் பெறாதவர்கள் உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கணக்கு கிளையுடன் அலு வலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையின் ஓர் அங்கமாகவே இவ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ள தாகவும், உரியவர்கள் மிக விரைவில் தொடர் புகளினை மேற்கொண்டால் நடமாடும் சேவை மூலம் துரித கதியில் வழங்குவதற்கு இலகு வாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படு கின்றது. (ஓ-30)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வருகைதரும் அதிபர்கள் தர உள்ளீட்டு செலவுக்கூற்று நிதி விபரம் மற்றும் தேவைகள் விபரம் ஆகியவற்றுடன் தவறாது சமுகமளிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ் ணன் அறிவித்துள்ளார். (ஓ-4)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி த.கலாமணி எழுதிய "பாட்டுத் திறத்தாலே" என்ற சிறுகதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கலாபூஷணம் தெணியான் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை கவிஞர் கொற்றை பி.கிருஷ்ணானந்தனும், மதிப்பீட்டு ரைகளை எழுத்தாளர்களான சி.ரமேஷ், இயல்வாணன் ஆகியோரும் வழங்கவுள்ள னர்.

சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே. சிவராஜலிங்கம் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார். (ஓ)

## புதிய கணனிப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டி லிப்பாய் பிரிவில் எதிர்வரும் 9 ஆம் திகதி புதிய கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள் ளது.

இப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங் களை எதிர்வரும் 8 ஆம்திகதிக்கு முன்னர் 3ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டை எனும் முகவரியில் அமைந்துள்ள பிரிவு காரியாலயத்தில் ஒப்படைத்து தமது பதிவுகளை. மேற்கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு பிரிவு அலுவலகத்துடனோ அல்லது 021 222 2886 என்ற தொலை பேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளு மாறும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.(ஓ-4)

## பதிவுகளை மேற்கொள்க

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு விவசாய சம்மேளன எல்லைக்குட்பட்ட வயற் காணிகளுக்கான பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாத காணி உரிமையாளர்களும் மற்றும் குத்தகை தாரர்களும் இன்று செவ்வாய்க்கிழமை பதிவு களை மேற்கொள்ளும் படியும் பதிவுகளை மேற்கொள்ளாத விவசாயிகளுக்கு எதிர்கா லத்தில் எந்தவித விவசாய உதவிகளும் வழங்கப்படமாட்டாது எனவும் சம்மேளனச் செயலாளர் சி. புவனதாஸ் அறிவித்துள் ளார். (ஓ-9-29)

## வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை-கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயவீதி புனரமைக் கப்படவுள்ளது.

தற்போது கல் மற்றும் மண் பறிக்கும் நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த பல வருடங்களாக திருத்தப்படாதி ருந்து வந்த மேற்படி வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக விடுத்து வந்த கோரிக்கையை அடுத்தே புனரமைப்புச் செய்வதற்கான துரித நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. (ஓ-49)

## கலந்துரையாடல்

வடமராட்சி வல்யப் பாடசாலை அதிபர் களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வடமராட்சி வலய அதிபர்கள் அனைவரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையான தர உள்ளீட்டு செல வுக் கூற்றுடன் தவறாது சமுகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

இந் நிகழ்வில் நடமாடும் சேவை தொடர் பான விடயங்களும் கலந்துரையாடப்பட வுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தி யாலய ஆசிரியர்களுக்கும் கல்விசார் ஊழி யர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளதாக வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் அறிவித்துள்ளார். (ஓ-4)




## மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனையில் சுகாதாரத் திணைக் களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங் களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற் குமான செப்ரெம்பர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்ட பத்தில் நடை பெறவுள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## மோட்டார் வாகன பதிவுப் புத்தகம் இதுவரை கிடைக்கப் பெறாதோருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகமூடாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு 2008 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ மோட்டார் வாகனப் பதிவுப் புத்தகம், சாரதி அனுமதிபத்திரம், வாகன இலக்கத்தகடு ஆகியனவற்றுக்கு விண்ணப் பங்களை அனுப்பி அது தொடர்பான ஆவணங்கள் இன்றுவரை பெற்றுக்கொள் ளாத உரிமையாளர்களை தமது பூரண தகவல்களுடன் யாழ்.பிரதேச செயலக மோட் டார் போக்குவரத்துப் பிரிவுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங் களுடன் வருகை தருமாறு யாழ்ப்பாண பிரதேச செயலர் கோரியுள்ளார். (ஓ-4)


யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

**முக்கிய அறிவித்தல்**

01.09.2009 செவ்வாய்க்கிழமை பி.ப.1 மணிக்கு அவசர கலந்துரையாட லொன்றை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சகல ஆசிரியர்களும், கல்விசாரா ஊழியர்களும் தவறாது பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(3350) அதிபர்

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com

**Learn French the French Way**
**French Classes**

இலங்கையிலுள்ள **French Embassy** மூலமும், France இல் உள்ள **Alliance Francaise de Paris** இல் [illegible] வும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

மாணவர்கள், [illegible] கற்க விரும்புவோர், மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

*இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் கற்கலாம்.*
*மற்றுமொரு புதிய பிரிவு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.*
*பதிவு, கட்டண விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.*

(3354)




காரைநகர் வியாவிலில் நடைபெற்ற கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத் திறப்பு விழாவில் இந்து மதகுருமார் பீடாதிபதி சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும், கலாநிதி சிவஸ்ரீ ஆர், வைத்தீஸ்வரக் குருக்கள் நாடாவெட்டி திறந்துவைப்பதனையும், லண்டன் நலன்புரிச் சங்க பிரதிநிதி இ.சுந்தரதாஸன் நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்வதனையும், தலைவர் மகாராணி க.சோமசேகரம், ஓய்வுபெற்ற அதிபர் சிவசரவணபவன் (சிற்பி), பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இதய நினைவுகளில் நீங்காத ஓராண்டு



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



## அமரர் திருமதி சிவகாமி மகாதேவன்

ஓய்வுபெற்ற தபாலதிபர்
முன்னைநாள் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அறங்காவலர்

ஓர் ஆண்டு என்ன ஓர் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உமது அளப்பரிய சேவை, அன்பு, பாசம், பரிவு எம் இதயத்தில் இருந்து என்றும் நீங்கவே நீங்காது. மேலும் மேலும் உங்கள் மேல் அன்பு பெருகிக்கொண்டு போகின்றதேயொழிய குறைவதாக இல்லை. என்றும் நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்ததாக நினைக்கவும் இல்லை. அப்படி நினைக்க முடியவும் இல்லை. கோடி அம்புகள் கொண்டு இதயத்தைத் துளைத்தது போன்று கொடூரமானதல்லவா உங்கள் பிரிவு. ஆனால் சாவுகள் தவிர்க்கமுடியாதவைதான் என்றாலும் உங்கள் சாவு சகிக்கமுடியாதது. ஆறுதல் சொல்ல யார் யார் இருந் தென்ன உங்கள் ஆசை அன்புக்கு ஈடாகுமா? தேறுதல் சொல்வதற்கு தெய்வமே வந்தாலும் உங்கள் திருமுகம் ஒருதரம் காண்பதற்கு இணையாகுமா? நீங்கா உங்கள் நினைவுகள் நிலையாக எங்கள் உள்ளங்களில் நிலைத்து, நீடித்து நிழல்போல் நிற்கின்றன. ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அம்மா என்று அழைக்க நீங்கள் இல்லையே. ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லையே

அம்மா உன்துயரம் எம் மனதில்.




கணவர்- மகாதேவன்
மகன் - சத்தியரூபன்
(கணக்காளர்)
MSR GROUP LTD -UK
உரிமையாளர்

TP- 00442085142678, 7804399546
www.msraccounting.com

நயினாதீவு - 3,
077 8177706,
060 2210499.

(3302)























உலக வங்கி இலங்கை அலுவலகத்தால் 'கல்வியின் கோபுரங்கள்' மற்றும் '21 ஆம் நூற்றாண்டுக் கான உயர் கல்வி எனும் விடயத்திலான கருத்தரங்கு யாழ். பல்க லைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வரவேற்புரையாற்றுவதையும் 'உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மாலினி பீரிஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, தென்னாசியப் பிராந்தியத்திற்கான மனித அபிவிருத்திப் பிரிவின் சிரேஷ்ட பொருளியலாளர் கலாநிதி ஹர்ஷா அதுருபனே, உலக வங்கியின் இலங் கைப் பணிப்பாளர் நௌகோ இஷி ஆகியோர் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்தி ருப்பதையும்,நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் -அலுவலக செய்தியாளர்)

# இன்று இரதத்தில் அருட்காட்சி தரும் தெல்லிநகர் துர்க்கையம்பாளை வணங்கிடுவோம்

## தேர் ஏறி வருகிறாள் துர்க்கை அம்பாள்

தேர் ஏறி வருகின்ற துர்க்கையம்மா – எங்கள்
தேசத்தில் அமைதியி[illegible]ும் அம்மா
பார் எங்கும் தமிழர் துயர் தீரும் அம்மா – உந்தன்
பக்தர்கட்கு அரு[illegible] ஓ[illegible] வாரும் அம்மா

தெல்லிப்பழை தன்னில் கோயில் கொண்டாய் – அன்று
தேவி நீ மகிஷனை வதம் புரிந்தாய்
அல்லலுறும் தமிழர்களை காத்தருள்வாய் – இந்த
அவனியிலே சாந்திதனை பொழிந்திடுவாய்

நா.கீதாகிருஷ்ணன், நயினாதீவு

## வண்ணத் தேரேறி வருகிறாய் வினைதீர்க்க

இமவான் மகளே ஈசன்மனை மங்களமே
அமரர் போற்றும் ஆனந்த வல்லியே
கயிலைவாசினி வாணி கரிமுகன் தாயே
பயத்தினை ஒழிப்பாய் பாவத்தை அழிப்பாய்

அன்ன பூரணி அனாத ரட்சகி
வண்ணத் தேரேறி வருகிறாய் வினைதீர்க்க
துர்க்கா தேவி வருக !
திருவே ! வருக ! சிவாயை வருக !

பா.பாலச்சந்திரன், சுன்னாகம்



## தேசநலன் காத்தருள தேரேறி வருவாயம்மா !

தெல்லிநகர் உறைபவளே தேரேறி வருவாயம்மா
தேசநலன் காத்தருள தேரேறி வருவாயம்மா
அல்லல்கள் தீர்த்திடவே தேரேறி வருவாயம்மா
அவலங்களை போக்கிடவே தேரேறி வருவாயம்மா
நல்லவைகள் நிறைவேற்ற தேரேறி வருவாயம்மா
நாடும் வரம் நமக்களிக்க தேரேறி வருவாயம்மா
எல்லை காண அழகோடு தேரேறி வருவாயம்மா
எங்களுக்கோர் தீர்வருள தேரேறி வருவாயம்மா

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

## தேரேறி வீதியிலே தேவியவள் ஊர்கோலம்

சொர்க்கம் தனை உருவாக்கும்
சொரூப நாயகியே!
சொந்தங்களை இழந்தாலும்
சோகங்களைபோக்குவாயே!

கயிலையில் சிவனுடன்
உறையும் தேவியவள்
தேரேறி பவனி வருகிறாள்
தெல்லிப்பளை துர்க்கையம்மன்

மருதங்கேணியூரான்
குருநகர் நலன்புரி நிலையம்

## நிம்மதி பரவிட வருகவே

புவிக்கொரு நாயகி புதுமையின் நாயகி
செவிக்கிசை வழங்கிடும் செந்தமிழ் நாயகி
அவிக்கொரு நாயகி ஆகமநாயகி
கவிக்கொரு நாயகி கருணையாம் துர்க்கையே

தேரினில் வருகிறாள் தெல்லியூர் நாயகி
ஊரினில் உலகினில் உயர்வு செய் நாயகி
சீரினில் செம்மை செய் தெய்வமாம் நாயகி
பாரினில் நிம்மதி பரவிட வருகவே

பு.நிவேதிகா

# அறிவுப் பொருளாதாரமும் அறிவு முகாமைத்துவமும்

(நேற்றைய தொடர்ச்சி)

21 ஆம் நூற்றாண்டு அறிவுக் கைத்தொழில்களின் ஆண்டாகும். அறிவுத் கைத்தொழிலின் வளர்ச்சி அறிவுத் தொழிலாளரையே வேண்டி நிற்கும். அறிவுப் பொருளாதாரமொன்றிற்கு இத்தகைய மாற்றங்கள் நாம் முன்னொரு போதும் சந்தித்திராதவை.

புதிய விளக்கம், புதிய நிலை, புதிய பாணி அனைத்தும் மாற்றமுறும். ஒரு சூழலிலே அறிவுச் சமூகமும் அறிவுப் பொருளாதாரமும் அறிவுத் தொழிலாளர்களுமாவர்.

இத்தகைய பொருளாதாரத்திற்கு தகவலும் தொடர்பாடலும் நுண் உயர் நுட்பவியல், வானிலை ஆராய்ச்சி, டெலி மருத்துவம் இ-வர்த்தகம், டெலி கொள்பரன், இ- கற்றல் நனோ தொழில் நுட்பம் (NANO) என்ற வகையிலான அறிவுக் கைத்தொழில்கள், புதிய அறிவுத் துறைகள் பரிணமிக்கும் சமூகமாக அறிவுச் சமூகமும் அதன்வழி அறிவுப் பொருளாதாரமும், அறிவுத் தொழிலாளர்களும், அறிவுக் கைத்தொழிலும் என்றவாறான சேர்மானங்களினா லேயே பொருளாதாரம் இயங்கும்.

இத் தகவலை மாறிவரும் பொருளாதார முறையொன்றில் அறிவினை முகாமை செய்வது புதிய எண்ணக் கருவாகக் கருதப்படுகின்றது.

புதிய அறிவு தோற்றம் பெறுகின்றது. அதனைத் தேடுவது, அதனைப் பிரயோகிப்பது, அதனைப் பரப்புவது, அறிவை மூலதனமாக்குவது, அறிவினால் சொத்துக்களை உருவாக்குவது, அறிவை ஆக்க சாதனமாகப் பயன்படுத்துவது, அறிவு என்று மரபு ரீதியான பொருளில் இருந்து மாறி வருவது போன்ற இன்னோரன்ன அறிவு தொடர்பான சிக்கல் நிறைந்த சமூகமொன்றில் அறிவினை முகாமை செய்ய வேண்டிய தேவை இயல்பாக எழுந்துவிடுகின்றது.

ஒரு ஆசிரியராயினும் வேறு ஒரு அறிவுத் தொழிலாளியாயினும் சரி புதிய அறிவினையும், புதிய பயிற்சியினையும் மாற்றங்களையும் அறிந்து மாற்றங்களுக்கேற்ப அறிவை முகாமை செய்யாதவர் அறிவுத் தொழிலாளராக வாழமுடியாது போகும்.

எனவே, அறிவு முகாமைத்துவம் என்பது அறிவுச் சமூகமொன்றில் முக்கியத் துவம் பெறுகின்றது.

**அறிவு முகாமைத்துவம்**
(Knowledge Management)

பாடசாலைகள் முதல் அனைத்து நிறுவனங்களும் புதிய அறிவினை தமது தேவைகளுக்கு ஏற்றவாறு உறிஞ்சிக் கொள்வதும் பிறரது அல்லது பயனாளிகளின் நன்மைக்கு ஏற்ற விதத்திலும் பிரயோசனமான முறையில் அறிவைப் பிரயோகித்தலும் அறிவு முாமைத்துவம் ஏனப்படும்.

ஒரு வர்த்தக நிறுவனத்தினைப் பொறுத்து அறிவு முகாமைத்துவம் என்பது வியாபாரத்தின் பெருக்கத்திற்கும் பெறுமதியினை அதிகரிப்பதற்கும் வாடிக்கையாளருடன் கொள்ளும் இடைவினையின் போது நிறுவனம் சார்ந்த அறிவினைப் பிரயோகிப்பது அறிவு முகாமைத்துவம் எனப்படும்.

அறிவுச் சமூகமொன்றில் அறிவுக் கைத்தொழில்கள் முதன்மை அடைந்து வரும்.

அறிவுச் சமூகமொன்றின் இருப்பினை தகவல் புரட்சி தீர்மானிக்கின்றது. தகவலும் தொழில்நுட்பவிலும் கற்கும் முறைகளை மாற்றியுள்ளது.

அறிவினை முகாமை செய்தல், அறிவினை பரிமாற்றம் செய்தல், அறிவினை ஒழுங் கமைத்தல் என்பன தேவைப்படுகின்றன.

இதற்காக வாழ்நாள் பூராக்வும் கற்றலில் ஈடுபட வேண்டியுள்ளது. புதிய தகவல்களையும் அறிவையும் பெற வேண்டியுள்ளது. நிதம் மாறிக்கொண்டிருக்கும் சூழலில் அறிவைத் தேடுவது, அதனை முகாமை செய்வதும் தேவையாக மாறியுள்ளது.

வாழ்நாட் பூராகவும் ஒருவர் கற்றலில் ஈடுபட ஒரு ஆசிரியர் அல்லது பாடசாலை அல்லது வேறு நிறுவனத்தில் தங்கி நிற்கும் நிலை பொருத்த மாற்றதாக இருக்கும்.

இக் கடந்தகால சிந்தனை அறிவுச் சமூகத்திற்கோ அறிவுப் பொருளாதாரம் ஒன்றிற்கோ சார்பானதாகவில்லை. எனவே, ஒவ்வொருவரும் தானாகக் கற்க வேண்டியிருக்கும் கற்றலுக்கு கற்கும் சமூகமாக இருக்கும் வாழக்கற்பது சமூகமாகி இருக்கும்.

இதனால் நிகழ் கால உலகிற்கும் புலப்படாத எதர்கால உலகிற்கும் தேவையான அறிவை ஒழுங்கமைத்து அறிவை முகாமை செய்ய வேண்டி இருக்கும். அறிவினை எங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தேவையான அறிவு எது? போன் றன கடந்த காலம் போல் அல்லாது நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் பிரச்சினைக்குரிய வினாக் களாகவே காணப்படும்.

நிதம் மாறிக்கொண்டு இருக்கும் உலகில் புதிய அறிவு தோன்றிக் கொண்டு இருக்கும். அறிவுச் சமூகமொன்றின் நபரொருவர் அறிவை முகாமை செய்வதன் மூலமே வாழ முடியும்.

அறிவுச் சமூகமொன்றில் பொருளாதாரமே காணப்படும் அறிவுப் பொருளாதாரமொன்றில் அறிவு ஒரு ஆக்க சாதனமாக மட்டுமன்றி அது அறிவுச் சொத்தாகவும் கருதப்படும்.

அறிவினைச் சொத்தாகக் கருதும் சமூகங்களாக மனிதகுலம் மாறி வருகின்றது. அத்தகைய நிலையை அடைய சமூகங்கள் தூர இலக்காக அறிவுச் சமூகம் இருந்து வருகின்றது.

இந்த சமூகத்தில் அறிவு என்பது அறிவு மூலதனத்தின் ஒரு உபபகுதியாகவே பொருள் விளக்கம் கொள்ளப்படும். (Knowledge is a Subset of intellectual Capital) அறிவுப் பொருளாதாரமென்றில் அறிவு என்பது சொத்தாகும்.

அதேநேரத்தில் அது அறிவு மூலதனமாகும். அறிவு மூலதனம் என்பது அறிவு கூட்டான சிறப்புத் தேர்ச்சி, நன்மதிப்பு, இலட்சினையின் பெறுமதி, முத்திரை திறன் உடையவர்கள் அவர்களின் தேர்ச்சி, சந்தை நிலைவரம், அங்கீகாரம், சாதனைகள் அல்லது அடைவுகள், தொடர்புகள், ஆதரவு, பங்காளிகள், புத்தாக்கம், தலைமைத்துவம், மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் என்பனவற்றின் சேர்மானமே அறிவு மூலதனமாகும்.

இதனால் அறிவு என்பது முகாமை செய்யப்பட வேண்டியதாகின்றது. அறிவு என்பது கடந்த காலப் பொருளில் விளக்கம் கொள்ளப்படாது. அறிவு என்பது செயற்படும் தகவலாகும்.


பீட்டர் டுருக்கர் கூறியது போல் அறிவுச் சமூகமொன்றில் அறிவு முகாமை செய்யப்பட வேண்டும்.

அறிவு அதன் பண்பிலும் பொருளிலு-ம் 21 ஆம் நூற்றாண்டில் வேறுபட்டு நிற்கின்றது.

அறிவுக்கு எல்லைகள் கிடையாது. (Border Lessness) பணத்தினை விட அது வேகமாகப் பயணிக்கின்றது. மேல்நோக்கி மிக வேகமாக பயணிக்கின்றது.

முறைசார் கல்வி மூலம் இலகு வாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆக்க சாதனமாக பயன் படுத்தப்படுகின்றது. அது வளமாகக் கருதப்படுகின்றது.

மேற்படி பண்பு களால் அறிவுப்



புரட்சி யுகத்தில் அறிவு முகாமை முதன்மை பெறுகின்றது.

அறிவினை முகாமை செய்தல் என்பது (The Knowledge Management Process) 5 பிரதான செயன்முறைகளின் சேர்மானமாகும்.

- புதிய அறிவினைப் படைத்தல்
- அறிவினை சேமித்தல், பாதுகாத்தல், தரவுகளை ஒழுங்கமைத்தல், சுட்டிகள், படங்கள் போன்றவற்றினை வகைப்படுத்தி ஒழுங்குபடுத்துதல்.
- பயனாளிகளுக்கு இலகுவில் சென்றடையக்கூடியதாக இருப்பதுடன் அது உடனடி பரப்புரை (diseminated) செய்யத்தக்கதாகவும் இருத்தல் அவசியம்.
- பிரயோகிக்கத்தக்கதும் பின்னூட்டல் செய்யத்தக்கதும் அறிவினைக் கொண்டே வெற்றியினை அளக்கக் கூடியதுமாகவும் இருக்க வேண்டும்.

**ஏ.சி.ஜோர்ஜ்**
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

- பேசப்படாத முறையில் கிடைக்கும் அறிவினைக் கைப்பற்றுதல் வேண்டும்.

அதாவது இருவிதமான அறிவில் (Explicit and Tacit) தரவுதளம், புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பன வெளிப்படுத்த முடியாத அறிவு (Tacit) அறிவு எனப்படும்.

இவ்வினை தேடிப் பெறு தலும் அறிவு முகாமைத்துவத்தில் உள்ளடக்கப்படும் விடயமாகும்.

எனவே 'அறிவுப் பொருளாதாரமும் அறிவுச் சமூகமும் 21 ஆம் நூற்றாண்டின் தாரக மந்திரமாகும்.

(முற்றும்)

## விடுதலைப்புலி சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்த விசேட நீதிமன்றம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ள விஷேட நீதி மன்றம் ஒன்றை அமைக்க நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நீதிமன்றத்தை அமைப்பது குறித்து நீதி அமைச்சர் மிலிந்த மொறகொட ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் சரணடைந்தபுலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் இந்த நீதி மன்றில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகளும் இந்த நீதிமன்றில் விசாரிக்கப் படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டிய புலி உறுப்பினர்கள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டிய புலி உறுப்பினர்கள் பற்றிய தீர்மானங்கள் இந்த நீதிமன்றின் மூலமாக எடுக்கப்படவுள்ளது.

(ஓ-6)

## இலங்கைக்கு அவதூறு ஏற்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு — எதிராக சட்ட நடவடிக்கை —

(கொழும்பு)

இலங்கைக்கு அவதூறு ஏற்படும் வகையில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது

இலங்கையின் நன்மதிப்பிற்கு குந்தகம் ஏற்படும் வகையில் வெளிநாடுகளில் இயங்கி வரும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடக அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் செயற்பட்டு வருவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான அமைப்புக்களுக்கு எதிராக இராஜதந்திர ரீதியில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் இராஜ தந்திர நிறுவனங்களின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.


(ஓ-6)

# உடல் பருமனுக்கான காரணிகளும் குறைப்பதற்கான வழிமுறைகளும்

உடல் பருமன் பிரச்சினை உலகின் மேலை நாடுகளை மட்டுமின்றி ஆசிய நாடுகளையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியுள்ளது. உலக அளவில் 100 கோடி பேர் அதிக உடல் எடையுடன் உள்ளனர். இதில் 30 கோடி பேர் உடல் பருமன் பிரச்சினையில் சிக்கியுள்ளனர்.

இயல்பான எடை, அதிக எடை, உடல் பருமன் என உடல் எடையை மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். உயரத்துக்கு ஏற்ற எடை உள்ளவரா நீங்கள்? இதயம் உட்பட உடலின் அனைத்து உறுப்புகளும் ஆயுள் முழுவதும் ஊங்களுக்காக நன்றாக உழைக்கும்.

அதுசரி இயல்பான எடை என்ன, அதிக எடை என்ன, உடல் பருமன் ஆகியவற்றை ஒருவரின் உடலின் அளவைப் பார்த்து மருத்



துவ உலகம் நிர்ணயிப்பதில்லை. உடல் எடை அதிகரிப்பை நிர்ணயித்து, எச்சரிப்பதற்காகவே உடல் திணிவுச் சுட்டி (பி.எம்.ஐ) உள்ளது.

இந்த அட்டவணை கணக்கீட்டின் அடிப்படையில் கிடைக்கும் பி.எம்.ஐ. கணக்கீட்டை கொண்டுதான் உங்களது எடை இயல்பானதாக உள்ளதா, அதிக எடையுடன் உள்ளீர்களா அல்லது மருத் துவரிடம் சிகிச்சைக் குச் செல்லும் அள வுக்கு உடல் பரும னாக உள்ளீர்களா என டாக்டர்கள் தீர்மானிப்பார்கள்.




**உடல் பருமன் - காரணங்கள்**

உடலில் சேரும் அதிகப்படியான கொழுப்பு காரண மாக உடல் பருமன் பிரச்சினை ஏற்படுகிறது. தேவைக்கு அதிகமான உணவை நீங்கள் சாப்பிட்டு, அது கலோரியாக செலவிடப்படாத நிலையில், உடலில் கொழுப்புச் சத்து அதிகரிக்கிறது. விளைவு உடலின் எடை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து உடல் பருமன் பிரச்சினையாக மாறுகிறது.

பெற்றோரில் ஒருவரோ அல்லது இருவருமோ உடல் பருமனாக இருந்தால் வாரிசுகளுக்கும் உடல் பருமன் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உண்டு. குறைவான தூக்கம், மன அழுத்தம் ஆகியவை காரணமாகவும் உடல் பருமன் ஏற்படுகிறது.


**ஆண்களை விஞ்சும் பெண்கள்**

ஆண்களை விட பெண்களுக்கு உடலில் அதிக கொழுப்பு சேருகிறது. ஆண்களில் 25 சதவீதத்துக்கும் அதிகமானோர் உடலில் கொழுப்புச் சத்து சேர்ந்து உடல் பருமன் பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளனர். பெண்களில் 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் உடல் பருமன் பிரச்சினையால் கஷ்டப்படுகின்றனர்.

பெண்களுக்கு ஆண்களை விட குறைவாக தசை உள்ளது. இதனால் கொழுப்பு உட்பட அதிக கலோரிச் சத்து பெண்களின் தசைக்குச் செல்கிறது. இதனால் ஆண்களைக் காட்டிலும் எடை அதிகரித்தல் பிரச்சினை பெண்களுக்கு விரைவாக நடைபெறுகிறது. மேலும் பெண்களுக்கு எடையைக் குறைப்பதும் மிகவும் கடினமாக உள்ளது.

**புரதச் சத்து - அக்கறை செலுத்துங்கள்**

உடல் பருமன் பிரச்சினைக்கு முந்தைய நிலையான உடல் எடை அதிகரிப்பு பிரச்சனை ஏற்பட்ட உடனேயே உஷார் அடையுங்கள். தினமும் காலை, மாலை 1 மணி நேரம் உடற்பயிற்சி செய் யுங்கள். கொழுப்புச் சத்து நிறைந்த பால் - தயிர் - சர்க்கரை ஆகியவற்றைத் தவிர்த்து, பருப்பு, மஞ்சள் கரு இல்லாத முட்டை, சோயா போன்ற புரதச் சத்து நிறைந்த உணவைச் சாப்பிடத் தொடங்குங்கள்.




**நவீன சிகிச்சை என்ன?**

உடற்பயிற்சி, உணவு மாற்றம் உட்பட எதற்கும் கட்டுப்படாமல் உடலின் எடை 100 கிலோ, 150 கிலோ, 200 கிலோ என அதிகரித்துக் கொண்டே இருந்தால் அறுவைச் சிகிச்சையே தீர்வு.

லாப்ராஸ்கோப்பி முறையில் நவீன அறுவைச் சிகிச்சை செய்து உடல் பருமன் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

**மூன்று வகையான சிகிச்சைகள்**

எடைக்கு ஏற்ப நோயாளியின் உடல் பருமன் பிரச்சினையைப் பொறுத்து சிகிச்சை குறித்துத் தீர்மானிக்கப்படும்.

1. மிக அதிக எடை உள்ளவர் களுக்கு அதிக பசியை உண்டாக்கக் கூடிய ஹோர்மோன் சுரப்பி சிகிச்சை மூலம் அகற்றப்படும். இதனால் பசி உணர்வு குறைந்து, சாப்பிடும் உணவின் அளவு குறை யும். சிகிச்சை செய்து கொண்ட 4 ஆவது நாள் வீடு திரும்பி விடலாம்; எடையும் குறையத் தொடங்கும்.

2. 'பேண்டிங்' என்பது மற்றொரு சிகிச்சை முறை. சிகிச்சை மூலம் வயிற்றுப் பகுதியில் ஒரு 'பேண்ட்' போட்டு சாப்பாட்டின் அளவைக் குறைத்து உடலின் எடையைக் குறைய வைக்க முடியும். ஓரிரண்டு ஆண்டுகளில் உடல் எடை குறைந்ததும் இது 'பேண்டிங்' கை எடுத்து விடலாம்.

3. அடுத்ததாக வெளிநாடுகளில் பிரபலமாக இருக்கும் வயிற்றுப் பகுதி பை-பாஸ் அறுவைச் சிகிச்சை. இந்த சிகிச்சை 200 கிலோவுக்கு மேல் இருப்போருக்குச் செய்யப் படும்.

இந்த 3 - ஆவது முறையில் சிறு குடலின் சிறிய பகுதியில் பை-பாஸ் அறுவைச் சிகிச்சை செய்யப்படும். சிகிச்சைக்குப் பிறகு வேகமாக எடை குறையும். இந்த அறுவைச் சிகிச்சை மொத்தம் 6 மணி நேரம் செய்யப்படும். மருத்துவமனையில் ஒரு வாரம் தங்க வேண்டியிருக்கும்.

**டாக்டர் டி. சுரேஷ்**
**இரைப்பை - குடல் அறுவைச் சிகிச்சை மற்றும் உடல் பருமன் குறைப்பு சிகிச்சை நிபுணர், அம்மா மருத்துவமனை, சூளைமேடு சென்னை.**

**அலட்சியம் வேண்டாம்**


எனவே உடல் பருமன் பிரச்சனை குறித்து அலட்சியமாக இருக்காதீர்கள். காய்ச்சல் வந்தால் டாக்டரிடம் செல்வது போன்று, உடல் எடை அதிகரிக்கத் தொடங்கிய உடனேயே டாக்டரிடம் செல்லுங்கள்.

# பேசிக்கொண்டே இதய பை-பாஸ் அறுவைச் சிகிச்சை

இதய அறுவைச் சிகிச்சை தேவைப்படுவோருக்கு மயக்க மருந்து கொடுத்து நோயாளியின் சுய நினைவு இல்லாமல் அறுவைச் சிகிச்சை செய்வதே அனைத்து மருத்துவமனைகளிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

மாறிவரும் நவீன மருத்துவ முன்னேற்றத்தில் ஒரு சில அதிசயங்களும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர் ஒருவருக்கு



மயக்க மருந்து செலுத்தாமல் நோயாளியுடன் பேசிக் கொண்டே 'பை - பாஸ்' சர்ஜரி செய்யப்பட்டது.

இந்த சர்ஜரிக்கு முன் சில மாதங்களாக அவர் நெஞ்சு வலி மற்றும் மூச்சுத் திணறலினால் அவதிப்பட்டு வந்தார். தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டன. பரிசோதனையின் முடிவில் இவரது இதயத்தில் உள்ள இரு கரோனரி இரத்தக் குழாய்களில் பெரிய அளவில் அடைப்பு இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. பை-பாஸ் அறுவைச் சிகிச்சை செய்தால் தான் அவருக்கு மறுவாழ்வு கொடுக்க முடியும் என்ற நிலை இருந்தது.

பொதுவாக பை-பாஸ் அறுவைச் சிகிச்சை செய்யும் போது நோயாளிக்கு முழு மயக்க மருந்து கொடுத்து அறுவைச் சிகிச்சை செய்வதே வழக்கம்.

இம் முறையைக் கடைப்பிடிக்காமல் மயக்க மருந்து கொடுக்காமல் சுய நினைவுடன் இருக்கும்போது நோயாளியுடன் பேசிக் கொண்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. இம்முறைக்கு ஆங்கிலத்தில் 'செர் விக்கல் எபிடியூரல் அனஸ்தீசியா' என்று கூறுவர். 5 மணி நேரம் இந்த அறு வைச் சிகிச்சை நடைபெற்றது.

இம்முறைக்கு நோயாளியின் ஒத்துழைப்பு மிக அவசியம். கை, கால்களை அசைக்காமல் ஒரே இடத்தில் படுத்திருக்க வேண்டும். முக்கியமாக மருத்துவருக்கு முழு ஒத்ழைப்பு கொடுக்க வேண்டும்.

மயக்க மருந்து கொடுக்காமல் மூக்கிலும், வாயிலும் குழாய்கள் பொருத்தப்படாததால் அறுவைச் சிகிச்சை செய்வதற்கு வசதியாக இருந்தது. இவ்வாறு செய்வதால் செயற்கை சுவாசம் 'வென்ட்டிலேட்டர்' அளிக்கும் தேவை ஏற்படவில்லை.

**டாக்டர் ஏ. ஆர். ரகுராம்**
**இதய அறுவை சிகிச்சை நிபுணர்**
**மீனாட்சி மிஷன் மருத்துவமனை**
**மதுரை**

# வறட்டு இருமல் ஏற்படுவது எதனால்...

*குழந்தைகளுக்கு காது குத்தும் பழக்கம் கலாச்சாரம் சார்ந்த விடயமா அல்லது அதில் ஏதேனும் மருத்துவ ரீதியான காரணமிருக்கிறதா?*



சீனாவில் காதின் பகுதிகளைப் பார்த்துவிட்டு ரிப்ளெக்சாலஜி மூலம் சில தீர்வுகளை கூறுவதாக அச்சு ஊடகங்கள் மூலம் அறிந்திருக்கிறேன். அதாவது அக்கு பஞ்சர் மூலம் சில நோய்களுக்கு நிவாரணம் அளிப்பது. ஆனால் சமீபத்திய ஆய்வில் அக்கு பஞ்சர் மூலம் நோய்கள் குணமாக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காது குத்துகளால் வயிற்றில் உள்ள ஜீரண உறுப்புகள் தடையின்றி இயங்கும் என்பதற்கு மருத்துவ ரீதியாக சான்று இல்லை எனலாம். ஆனால் மாற்று மருத்துவ முறையான ஆயுர்வேதம் இதனை நம்புகிறது என்பதனையும் படித்திருக்கிறேன்.

தொண்டை பகுதியில் இருக்கும் உள்நாக்கு என்பது பிறக்கும்போதிருந்தே நம்முடன் இருக்கிறது. இந்த உள்நாக்கு திடீரென்று இருமலையோ அல்லது தொண்டையையோ பாதிக்கிறது என்றால் அது நம்ப முடியாத விடயம். சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ உள் நாக்கு இருப்பதால் இருமல் வராது. மூக்கில் சளி பிடித்து, அது உள் நாக்கின் பின்பகுதி மூலமாக தொண்டைக்குள் இறங்கும் போது தான் இருமல் ஏற்படுகிறது. எனவே சளியினால் தான் இருமல் ஏற்படுகிறதே தவிர உள் நாக்கு நீள்வதால் இருமல் ஏற்படுவதில்லை.

**"வறட்டு இருமல் ஏற்படுவதற்கு தொண்டையில் வளர்ந்திருக்கும் சதை தான் காரணம் என்றும், அதற்கு ஒரு சிறிய மூங்கில் குச்சியைக் கொண்டு தொடர்புடைய இடத்தில் சிறிய அழுத்தம் கொடுத்தால், அந்த சதை, நாவின் உள் அண்ணத்தை தொடாது என்றும், அதனால் வறட்டு இருமல் நின்றுவிடும்" என்று ஒரு சாராரும், "வறட்டு இருமலுக்கு, பாலுடன் குளிர்பானத்தை கலந்து பருகினால் வறட்டு இருமலை ஏற்படுத்தும் தொண்டை பகுதியில் உள்ள சதை சீராகிவிடும்" என்று மற்றொரு பிரிவினரும், "வறட்டு இருமலோ அல்லது உணவை விழுங்க முடியாமல் சிரமம் ஏற்படும் போதோ தலையின் உச்சிப் பகுதியில் உள்ள முடியை பிடித்து இழுத்து, அழுத்தம் கொடுப்பதன் மூலம் தீர்வு கிடைக்கும்" என்று மற்றொரு பிரிவினரும் கிராமப் புற பகுதிகளில் ஏற்படுத்தி வைத்திருக்கும் நம்பிக்கை சரியானது தானா?**

இதுபோன்ற செய்கைகளினால் உடலில் காயங்கள் ஏற்படுமே தவிர இருமல் குணமாகாது என்பதை தெளிவாக புரிந்து கொள்ளுங்கள்.


ஒருவர் பேசத் தொடங்கும் போது ஒருவித அளவுகளில் பேசத் தொடங்குகிறார். ஆனால் அவரே தொடர்ச்சியாக பத்து நிமிடம்வரை பேசும் போது பேச்சின் இறுதியில் முதலில் பேசத் தொடங்கிய போது இருந்த ஒலியளவு இருப்பதில்லையே ஏன்?

ஒருவரின் சக்தியைப் பொறுத்து இது மாறுபடும். பேசும் போது உள்ளிழுக்கப்படும் காற்றின் அளவும், அதனை சொற்களாக வெளிப்படுத்துவதற்கு இடையே நிகழும் சமச்சீரற்ற தன்மையே இதற்கு காரணம் எனலாம். ஒரு சிலருக்கு பேசும் போது அவர்களுடைய வோகல் காட்சில் இயல்பிலேயே இடையூறு இருந்தாலும் இது நிகழும்.

**டாக்டர் சஞ்சய்**
**காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர்**
**சென்னை.**

# இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் குரல் கொடுக்க தவறிவிட்டார் ஐ.நா. செயலர் பான் கீ மூன்

## தி எக்கணமிஸ்ட் சஞ்சிகை



இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் காத்திர மான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க வில்லை என பிரபல தி எக்கணமிஸ்ட் சஞ் சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் எதிர்நோக்கி வரும் அவலங்கள் தொடர்பில் பான் கீ மூன் வெறும் பார்வையாளராக செயற்படுவதாக அதில் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றச் செயல்கள் தொடர்பில் பான் கீ மூனுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக நோர் வேயின் சூழல் மற்றும் சர்வதேச விவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் எதிர்வரும் நாட்களில் நோர் வேக்கு விஜயம் செய்யவுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகளின் செயலாளர் நடந்து கொண்ட விதம் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், சம்பவங்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு வேடிக்கை பார்த்ததாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதன் மூலம் பான் கீ மூனின் கடமை தொடர்பிலான சந்தேகம் எழுந்துள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் பான் கீ மூன் இதுவரையில் குரல் கொடுக்கத் தவறி யுள்ளதாக அந்த பத்திரிகை சுட்டிக் காட்டி யுள்ளது.

அத்துடன் நோர்வேக்கு விஜயம் செய்ய வுள்ள பான் கீ மூனுக்கு எதிராக நோர்வே யிலுள்ள தமிழர்கள் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

இராணுவ வீரர் ஒருவரை பாலியல் துஷ் பிரயோகத்திற்கு உட்படுத்தி சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ கப்டன் மற்றும் சிப்பாயை சிறைச் சாலையில் பிரத்தியேகமாக சிறை வைக்கு மாறு அநுராதபுரம் நீதிபதி உத்தரவிட்ட போதும் அதனை மீறிய அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் அநுர சில்வாவை தனிப்பட்ட வகையில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அநுராதபுரம் நீதிமன்ற நீதிபதி தர்ஷிகா விமலசிறி கடந்த வெள்ளிக்கிழமை உத்தர விட்டார்.

புதுமாத்தளன் பகுதியில் சேவையாற்றும் இருபதாவது காலாட்படையின் 'ஏ' பிரிவுக்கு கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட கப்டன் தம்மிக்க சேனாரத்ன, இராணுவ சிப்பாயான திலும் சஞ்சீவ ஆகியோரே இதே அணியில் சேவையாற்றிய சமன் குமார என்ற இரா ணுவ சிப்பாயை பாலியல் துஷ்பிரயோகத் திற்கு உட்படுத்தி சுட்டுக் கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டதுடன் இவர் கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசா ரணை 28 ஆம் திகதி அநுராதபுரம் நீதி மன்றத்தில் நடைபெற்ற போதே நீதிபதி மேற் படி உத்தரவை விடுத்தார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வரும் இரகசியப் பொலி ஸார் குறித்த சந்தேக நபர்கள் இருவரும் சிறைச்சாலையில் பிரத்தியேகமாக சிறை வைக்கப்படாமை பற்றி சுட்டிக் காட்டியதுடன் இச் சம்பவத்தின் சாட்சிகள் தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட் டுள்ளார்.

இத் தொலைபேசித் தொடர்புகளுக்கு அநுராதபுரம் சிறைச்சாலை காவலர்களில் ஒருவரான அசங்க பிரியதர்ஷன என்பவர் உதவி புரிவதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதேபோல் சந்தேக நபரான இராணுவ சிப்பாய் திலும் சஞ்சீவ முன்னர் நீதிமன் றத்தில் இச்சம்பவம் தொடர்பான விபரங்க ளைக் கூற விருப்பம் தெரிவித்த போதும் தற்போது அவர் இதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கப் டன் தம்மிக்க சேனாரத்ன இவரை அச்சுறுத் தியதாலேயே குறித்த சிப்பாய் உண்மைச் சம் பவம் பற்றிக் கூற மறுப்புத் தெரிவித்துள்ளார் என இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்தனர்.

இதனை அடுத்தே சிறைச்சாலை அத்தி யட்சகரை தனிப்பட்ட வகையில் நீதிமன்றத் தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளதுடன் தொலைபேசி தொடர்புகளை மேற்கொள்ள சந்தேக நபர்களுக்கு உதவிய குறித்த சிறைச் சாலைக் காவலரையும் கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் நீதிபதி உத் தரவிட்டார். (ஓ-6)

## பஸ் கட்டணங்களை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங்களை 7 வீதத்தி னால் அதிகரிக்க வேண்டும். 5.3 வீத அதி கரிப்பானது போதுமானதல்ல என்று தனி யார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதம் முதல் தனியார் பஸ் கட்டணங்களை 5.3 வீதத்தினால் அதிகரிப் பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே பஸ் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் கோரியுள்ளனர். (ச-5)


## சிங்கள ஊடகவியலாளர் இனந்தெரியாதோரால் கடத்தல்

(கொழும்பு)

சிங்கள ஊடகவியலாளரான பி எகானிலி கொட இனந்தெரியாதவர்களால் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கொழும்பின் புறநகர் ஹோமாகமையில் கடந்த சனிக்கிழமை யன்று இடம்பெற்றுள்ளது.

இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக மான சியரட் மற்றும் லங்கா இ நியூஷ் போன்ற வற்றில் கடமையாற்றியவராவர். கடத்தல் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. கடத்தலுக்கான காரணம் இன் னும் தெரியவரவில்லை. (ஓ-6)







தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவில் வேட்டைத்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. வேட்டைத்திருவிழாவின் போது சுவாமி தமது உதவியாளர்களுடன் வேட்டைக்குச் செல்வதைப் படங்களில் காணலாம்.

# மீண்டும் சூடுபிடித்துள்ள ராஜீவ் கொலை வழக்கு

## கே.பி.யை விசாரிக்க சி.பி.ஐ. திட்டம்



(புதுடில்லி)

இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் செல்வராசா பத்மநாதனிடம் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை தொடர்பாக நடந்த பணப் பரிமாற்றம் குறித்து விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் கே.பி. என்ற செல்வராசா பத்மநாதன், சமீபத்தில் கைது செய்யப்பட்டார். இலங்கை பாதுகாப்புப் படையினர் இரகசிய இடத்தில் வைத்து அவரிடம் தீவிர விசாரணைகள் நடத்தி வருகின்றனர். முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் பத்மநாதனின் பெயரும் உள்ளது. எனவே ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக அவரிடம் இந்தியா சார்பில் விசாரணை நடத்தப்படுமா என்ற கேள்வி எழுந்தது.

ராஜீவ் கொலை வழக்கின் முக்கிய குற்றவாளிகள் தனு ஒற்றைக்கண் சிவராசன், பொட்டு அம்மாண், பிரபாகரன் ஆகியோர் இன்று இல்லை. ஆனால் புலிகள் இயக்கத்திற்கு ஆயுதங்கள் பெறுவதுடன் சர்வதேச அளவில் மூளையாக இருந்து செயல்பட்ட கே.பி என்ற பத்மநாதன் பிடிபட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ராஜீவ் கொலைச் சதியில் பல்வேறு தகவல்கள் பணப்பரிமாற்றம், அது எப்படி நிறைவேற்றப்பட்டது போன்ற தகவல்கள் வெளிவரும் என்பதால் இவ்வழக்கு புத்துயிர் பெற்றுள்ளது.

பத்மநாதன் இலங்கை பாதுகாப்புப் படையினர் வசம் சிக்கியுள்ளதால் அவரிடம் ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்த இந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது. அவரிடம் என்ன கேள்விகள் கேட்க வேண்டும் என்பது குறித்த பட்டியலை சி.பி.ஐ. தயாரிக்கிறது.

புலிகள் அமைப்புக்காக பல்வேறு நாடுகளில் நிதி திரட்டும் பணியையும், ஆயுதங்கள் கடத்தி வரும் பணியிலும் பத்மநாதன் ஈடுபட்டு வந்ததால் அது தொடர்பான கேள்விகளும் விசாரணையில் இடம்பெறும் என தெரிகிறது.

பத்மநாதன் மற்றும் இந்த வழக்கில் தொடர்புடைய இந்தியர்கள் சிலர் உள்ளிட்டோரின் வங்கிக் கணக்குகள் குறித்த விபரங்களை விசாரிக்கவும் இந்த அமைப்பு தீவிரம் காட்டி வருகிறது.

பத்மநாதனுக்கு ஜெர்மனியில் வங்கிக் கணக்குகள் உள்ளதாக தெரிய வந்துள்ளதை அடுத்து ஜெர்மனி அதிகாரிகள் உதவியுடன் அதை அறிவதற்கும் முகவர் அதிகாரிகள் ஆர்வமுடன் உள்ளனர்.

இவ்வாறு மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. பத்மநாதனிடம் விசாரணை நடத்தப் படவுள்ளதை அடுத்து ராஜீவ் கொலை வழக்கு விவகாரம் மீண்டும் சூடு பிடித்துள்ளது. (ஓ-6)

# நடிகர்களின் அரசியல் பிரவேசத்தால் கலாசார சீரழிவு ஏற்பட்டுள்ளது

## பா.ம.க. எம்.எல்.ஏ. தெரிவிப்பு

(சென்னை)

விஜய், விஜயகாந் போன்ற நடிகர்கள், ஈழப் பிரச்சினைக்காக ஏதாவது போராட்டம் நடத்தியதுண்டா? என்று பா.ம.க எம்.எல்.ஏ. வேல் முருகன் கேள்வியெழுப்பியுள்ளார்.

கடலூரில் நடந்த அக்கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் கருத்து தெரிவிக்கையில்,

தகுதியும் திறமையும் இல்லாத நடிகர்கள் இன்று அரசியல் பிரவேசம் செய்து வருகின்றனர். இவர்களில் எத்தனைபேர் சமூக முன்னேற்றத்திற்காக போராட்டம் செய்து சிறை சென்றனர் என கூற முடியுமா? ஒரு அழைப்பாளரை அனுப்பியதற்கே கூச்சலிடும் விஜயகாந் போன்றவர்களால் நாட்டை எப்படி காப்பாற்ற முடியும் என்பதை இளைஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விஜய், விஜயகாந் போன்ற நடிகர்கள், ஈழப்பிரச்சினைக்காக ஏதாவது போராட்டம் நடத்தியதுண்டா? தகுதி, திறமை, சமூகம், அக்கறை இல்லாத நடிகர்களின் அரசியல் பிரவேசத்தால், கலாசார சீரழிவு ஏற்பட்டுள்ளது. இன்றைய அரசு ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகின்றது என்றார். (ஓ-6)

# இலங்கைக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் கைவிடப்பட வேண்டும்

## நாம் தமிழர் அமைப்பு தீர்மானம்

(சென்னை)

தமழக மக்கள் மின்சாரப் பற்றாக்குறையினால் திண்டாடும் இவ் வேளையில் இந்திய அரசு இலங்கைக்கு ஆயிரம் மெகாவாட் மின்சாரம் வழங்கும் திட்டத்தை கைவிட வேண்டும் என நாம் தமிழர் அமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தூத்துக்குடியில் நாம் தமிழர் இயக்கம் சார்பில் முள்வேலியில் அடைக்கப்பட்ட ஈழத் தமிழர்களை உடனடியாக அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்ப வலிறுத்தி பேரணி மற்றும் பொதுக்கூட்டம் இயக்குனர் சீமான் தலைமையில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில் வடக்கின் வசந்தம் திட்டத்திலிருந்து இந்திய கட்டுமான தொழில் குழுமம் வெளியேற வேண்டும். மேலும் இக் குழுமத்தில் உறுப்பினராக உள்ள பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் வெளியேறுவதற்கு தி.க தலைவர் வீரமணி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழர்கள் உழைப்பு மற்றும் பணத்தில் வளர்ந்த ஐ.டி.இ.ஏ தொலைத்தொடர்பு நிறுவனம் வன்னி மக்களின் வாழ்விணைச் சிதைக்கும் எவ்வித திட்டத்திற்கும் துணை போக கூடாது. இல்லையெனில் அந்நிறுவனத்தை எதிர்த்து நாம் தமிழர் இயக்கம் போராடும்.

தமிழக மீனவர்களின் படுகொலைக்கு காரணமான இலங்கை அரசையும் அதன் அதிபர் ராஜபக்ஷேயும் பன்னாட்டுச்சட்டத்தின் கீழ் தண்டிக்க மத்திய மாநில அரசுகள் ஆவன செய்யவேண்டும். (ஓ-6)

# கைத்தொலைபேசி மூலம் பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் விநாயகர்

(இந்தூர்)

மத்திய பிரதேசத்திலுள்ள ஒரு விநாயகர் கோவிலில் கைத்தொலைபேசி மூலம் பக்தர்கள் கடவுளிடம் தங்கள் வேண்டுதலை தெரிவிக்கும் வித்தியாசமான நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

ம.பி மாநிலம் இந்தூர் அருகே பழமையான விநாயகர் கோவில் உள் ளது. இந்த கோவிலில் பின்பற்றப்படும் வித்தி யாசமான நடைமுறை குறித்து கோவில் பூசாரி மனோகர்பதக் கூறியதாவது

பல ஆண்டுகளுக்கு முன் கோவிலுக்கு ஒரு தபாலட்டை வந்தது. அதை அனுப்பி இருந்த பக்தர் தன்னால் கோவிலுக்கு நேரில் வர முடியவில்லை என்றும் தனது வேண்டுதல்களை தபாலட்டையில் எழுதியிருப்பதாகவும் அதை விநாயகர் முன் வைக்கும்படியாகவும் எழுதியிருந்தார்.

சில நாட்களுக்குப் பின் அதே பக்தரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் தன்னுடைய வேண்டுதலை விநாயகர் நிறைவேற்றிவிட்டார் என்றும் விரைவில் கோவிலுக்கு நேரில் வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.


இந்த தகவல் வெளியாட்களுக்குத் தெரியத் தொடங்கியதும் கோவிலுக்குத் தினம் தோறும் இதுபோல் ஏராளமான கடிதங்கள் வரத்தொடங்கின. கையடக்கத்தொலைபேசி பயன்பாடு அதிகரிக்கத்தொடங்கியதும் பக்தர்களின் வேண்டுதல்களிலும் மாற்றம் ஏற்பட்டன. கோவிலின் பூசாரி ஒருவருக்கு கையடக்கத்தொலைபேசியில் அழைப்பு வந்தது. அதில் பேசிய பக்தர் என்னால் நேரில் வந்து வழிபட முடியவில்லை. என்னுடைய வேண்டுதல்களை கடவுளிடம் தெரிவிக்க வேண்டும். எனவே கையடக்கத் தொலைபேசியை விநாயகர் சிலை முன் வையுங்கள். என் வேண்டுதலை விநாயகர் கேட்கட்டும் என்றார்.

இதையடுத்து கையடக்கத்தொலைபேசியை சிலை முன் வைத்தார் பூசாரி. பக்தரும் தனது வேண்டுதல்களை கையடக்கத் தொலைபேசி மூலமாக கடவுளிடம் தெரிவித்தார்.

சமீப காலமாக கோவிலுக்குச் சொந்தமான கையடக்கத் தொலைபேசிக்கு ஏராளமான அழைப்புகள் வரத் தொடங்கி விட்டன. தற்போது தினமும் 15 இலிருந்து 20 அழைப்புகள் வருகின்றன இவ்வாறு மனோகர் பதக் கூறினார். (ஓ-6)

# நான் செய்த முட்டாள்தனமான செயல்தான் திருமணம்

## நடிகர் கமலஹாசன்



நான் செய்த முட்டாள்தனமான செயல் தான் திருமணம் என்று நடிகா கமலஹாசன் கூறியுள்ளார்.

டெல்லியில் இருந்து ஒளிபரப்பாகும் தனியார் தொலைக்காட்சிக்கு கமலஹாசன் அளித்த பேட்டியில்,

திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன. எனவே திருமண்ஙகள் தேவையில்லை குடும்பம் மிகவும் சக்தி வாய்ந்தது. பலமானது வாணிகணபதி, சரிகா ஆகியோரை நான் திருமணம் செய்து கொண்டேன்.

எனக்கு பிடித் தவர்களின் ஆசையை நிறைவேற்ற நான் செய்த முட்டாள் தனமான செயல்தான் திரு மணம் நான் செய்து கொண்ட ஒருசமரசம் அது. நான் விரும்பிய பெண்ணுடன் இருக்க நான் கொடுத்த விலைதான் திருமணம்.

இவ்வாறு கமலஹாசன் சொன்னதும், நிருபர் குறுக்கிட்டு, அப்படியானால் 2 குழந்தைகள் பெற்ற பின் சரிகாவை ஏன் திருமணம் செய்து கொண்டீர்கள்? என்று கேட்டார். அதற்கு கமலஹாசன் தொடர்ந்து கூறியதாவது,

ஹோட்டல்களில் அறை எடுத்து தங்குவதில் சங்கடங்கள் ஏற்பட்டன. இந்தக் குழந்தைகளின் தாயார் இவர் என்று சொன்னால் அது மட்டும் போதாது . எனது மனைவி யார்? என்றும் கேட்டனர். எனவேதான் சரிகாவை துணைவியாராக ஆக்கிக்கொண்டேன். என் குழந்தைகளுடன் இப்போது சரிகா எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை. அவர்களும் அப்படித்தான். குழந்தைகள் சரிகாவுடன் இருக்க விரும்பவில்லை.

அவர்கள் வயது வந்தவர்கள் வாக்களிக்கவும் சுயமாக முடிபு எடுக்கவும் அவர்களால் முடியும் . எனவே அந்தப் பிரச்சினையில் நான் தலையிடுவது இல்லை.

நான் அரசியலில் ஈடுபடுவேனா ? என்று கேட்கிறார்கள். அரசியலில் நானும் இருக்கிறேன். ஆனால் நான் அரசியல்வாதியல்ல. என் படங்களில அரசியல் கருத்துக்கள் அழுத்தமாக இடம் பெற்று இருக்கும்.

நான் அரசியலுக்கு வருவதை மக்கள் விரும்ப மாட்டார்கள் என்மீது கடும் கோபம் கொள்வார்கள். பிறகு நான் துப்பாக்கியுடன் செல்ல வேண்டி இருக்கும் என்றார். (ஓ-6)

# சந்திராயன் திட்டம் கைவிடப்பட்டதாக இஸ்ரோதலைவர் மாதவன் நாயர் அறிவிப்பு

(பெங்களூர்)



நிலவைச்சுற்றி சந்திராயன்-1 விண்கலத்தின் திட்டப்பணிகள் முடிவுக்கு வந்து விட்டதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இத்திட்டம் கைவிடப்பட்டது என்று இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் நேற்று முன்தினம்அறிவித்தார்.

நிலவைப்பற்றி ஆய்வு மேற்கொள்வதற்காக கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் திகதி சந்திராயன்-1 விண்கலம் செலுத்தப்பட்டது. வெற்றிகரமாக செலுத்தப்பட்ட இந்த விண்கலம் நிலவைப்பற்றிய பல தகவல்களை தெரிவித்து வந்தது. இந்நிலையில் சனிக்கிழமை அதிகாலை முதல் சந்திராயனுடனான தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரோ்விஞ்ஞானிகள்மற்றும்மயில்சாமிஅண்ணாதுரை உள்ளிட்டோர் கூறியதாவது சந்திரனுக்கு அனுப்பப்படும் எந்த ஒரு விண்கலத்தின் ஆயுட்காலமும் ஆறு அல்லது ஏழு மாதங்களுக்கு மேல் நீடித்ததில்லை.

ஆனால் சந்திராயன் 10 மாத காலம் சிறப்பாக செயற்பட்டுள்ளது. சந்திராயன் கிட்டத்தட்ட 95 சதவீத பணிகளை முடித்து விட்டது. சந்திராயன் இரண்டு ஆண்டு காலம் செயல்படும் என நாங்கள் தான் தவறாக முன்பு கூறிவிட்டோம். சந்திராயனின் திட்டப்பணிகள் முடிந்து விட்டன.

மொபைல் போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டது போன்ற நிலையை இன்று ஏற்பட்ட நிலைக்கு ஒப்பிடலாம். சந்திராயன் விண்கல்த்திலிருந்து எந்த ஒரு தகவல் தொடர்பும் இல்லை. நாங்கள் கொடுக்கும் தகவல்களும் அதை சென்றடையவில்லை. சந்திராயனின் அன்டெனா மற்றும் இலத்திரனியல் தொகுதி அனைத்தும் நல்ல முறையில் தான் தொழிற்படுகின்றன.

இருப்பினும் ரேடியோ தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டு விட்டது. இருப்பினும் தொடர்ந்து தகவல் பெற முடியுமா என்பதை ஆராய்ந்து வருகிறோம். இவ்வாறு இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (ஓ-6)

என் நாக்கு சத்தியம் செய்தது. ஆனால், என்னுள்ளம் அதைச் செய்யவில்லை.

– ஈரான்

வலம்புரி

## பயண அனுமதி பெறுவதில் நீண்டு செல்லும் நிட்டூரம்

ஏ–9 பாதை திறப்பு–வடக்கின் வசந்தம்–துரித அபிவிருத்திப் பணிகள்–மீள்குடியமர்வு எனத் தடல்புடலான பேச்சுக்கள் ஊடகங்கள் ஊடாக மக்களின் செவிகளை ஊடறுத்துச் செல்கின்றன.

'ஏ–9 பாதையால் பஸ்ஸில் பயணம் செய்யலாம்' என்ற அருமையான அறிவித்தல் வெளிவந்துள்ள போதிலும் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெறுவதில் போதுமடசாமி என்றாகி விடுகின்றது.

யாழ். குடாநாட்டு மக்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்கு பாதுகாப்பு தரப்பிடம் பயண அனுமதி பெறவேண்டும் என்ற நிபந்தனை முற்றாக தளர்த்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் செயலணிக்கூட்டத்தில் இவ் அறிவித்தல் வெளிவருமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது சாத்தியம் அற்றதாகி விட்டது.

இந்த விடயம் குறித்து, குறித்த கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது மூன்று தினங்களில் பாதுகாப்பு அனுமதி வழங்கப்படுமென படை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இதனை நம்பி எம் மக்கள் ஏமாந்து போனதை தவிர வேறு எதுவும் நடந்ததாகவில்லை.

பயண அனுமதி பெறுவதற்கு மூன்று மாதங்கள் செல்லும் என்பதை தவறுதலாக மூன்று நாட்கள் என்று படைத்தரப்பினர் கூறிவிட்டனரோ என சந்தேகிக்கும் அளவிற்கு, பயண அனுமதி பெறுவதற்கான வில்லங்கம் நீண்டு செல்கின்றது.

பயண அனுமதி பெறும் நடைமுறையை முற்றாக நீக்குவது கடினம் எனில் பயண அனுமிக்கான படிவங்களை பொறுப்பேற்றுக் கொள்ளும் அந்த அந்த சிவில் அலுவலகங்களே பயண அனுமதியை வழங்கலாம் அல்லவா?

அதாவது கந்தர்மடத்தில் உள்ள படைத்தரப்பின் சிவில் அலுவலகமே கந்தர்மடப் பகுதியில் உள்ள மக்களுக்கான பயண அனுமதியை வழங்கக்கூடியதான ஏற்பாடுகளை செய்லாம் அல்லவா?

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் படைத்தரப்பின் தலைமை சிவில் அலுவலகமே அனுமதியை வழங்குவது என்பது காலதாமதத்திற்குரிய காரியமாகவே அமையும்.

இது தவிர ஏ–9 பாதை திறக்கப்பட்டு பஸ் போக்குவரத்து இடம் பெறும் நிலையில் கொழும்பில் இருக்கும் பயணிகள் வவுனியாவிற்கு சென்று அங்கு நெருக்குண்டு பயணச்சீட்டை பெறும் நடைமுறையும் மக்களுக்கு அசெளகரியத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

எனவே ஏ–9 பாதை திறக்கப்பட்டு விட்டது என்பதற்கு அப்பால் அந்தப் பாதையால் பயணிப்பதற்கான வசதி வாய்ப்புக்கள் பற்றி உரியவர்கள் சிந்திக்க வேண்டும்.

மக்களின் வாழ்வியலில் போக்குவரத்து வசதி மிகமிக அவசியமானது என்பதால் இது விடயத்தில் படைத்தரப்பினர் நெகிழ்வுத்தன்மையை கடைப்பிடிக்க வேண்டும்.

இல்லையேல் ஏ–9 பாதை திறக்கப்பட்டாலும் 'நான் உப்பு விற்கப்போனால் மழை கொட்டோ கொட்டுது' என்ற நிலை தான் தமிழ் மக்களுக்கு உரியதாக இருக்கும்.

# அடியார்களின் இதயத்தில் துயர் நீங்கி திருவருள் சுரக்கப் பிரார்த்திப்போம்

தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் கிழக்கு நோக்கிய சன்னிதானத்தில் சங்கு,சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு அருள் ஆட்சி புரிகின்றாள் . இவ்வாலயம் மாவை கந்தப் பெருமான் ஆலயத்தோடு பூர்வீகமான தொடர்பு கொண்டது . சுமார் மூந்நூறு ஆண்டுகள் பூர்வீக சிறப்புவாய்ந்தது . மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், துர்க்காதேவி ஆலயம் ஆகிய மூன்றும் வலிவடக்குப் பிரதேசத்தில் சிவாகம விதிமுறைகள் பிறளாது சீரும் சிறப்பும் பெற்று விளக்கு கின்றன.

### தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலய தேர்த் திருவிழா இன்றாகும்

சைவமும் தமிழும் தளைத்தோங்க சைவப் பயிர்வளத்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மா துர்க்கை அம்பாள் ஆலயத்தின் நித்திய பூசைகள் ,நைமித்திய விழாக்கள் என்பவற்றை நேர நியமங்களுக்கு அமைய பரிபாலனம் செய்தார்.தேவஸ்தானத்தின் முன்னை நாள் தலைவர்களான செ.தியாகராசா , தெ.து.ஜெயரத்தினம் ஆகியோர் வழிகாட்டிகளாக இருந்தனர். இதனைத் தொடர்ந்து இன்றைய தலைவர் செஞ்சொற்செல்வர் அவற்றைக் கைக்கொண்டு வருவது தேவஸ்தான வளர்ச்சிப் பணிக்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

மரத்துக்கு உயிர் கொடுக்கும் சிப்பியான கவின் கலைக்கு ஒரு கலாகேசரியாக அமைந்த கலாகேசரி ஆ.தம்பித்துரையால் 1978ஆம் ஆண்டு சித்திரத்தேர் உருவாகி தேர் விழாக் காட்சி சிறப்புறுகின்றது. தேர் விழா உலகப் பொதுவிழா பஞ்ச கிருத்தியத்தில் அழித்தல் தொழிலைக்குறிக்கின்றது. கடமை கள் கலைமகள் ஆசிரியர் வாகிச கலாநிதி கி.வா.ஜெகநாதன் ஐயா அவர்கள் . வாருங்கள் தேரை வணங்குங்கள்,ஈர்க்க ஒன் றாய் சேருங்கள் என்ற வரிகளால் அடியார்களை அழைக் கிறார்கள். தேரின் தத்துவம் கீழ் ஏழு உலகங்களையும் மேல் ஏழு உலகங்களையும் அண்டத்தோடு ஒப்பிட்டு விசாரம் செய்யப் படுவதாக அறிஞர்கள் கூறுவார்கள்.

சர்வதேசத்திலும் வாழும் அடியார் கூட்டத்துக்கு துர்க்கையம்பாள் திருவருள் வழங்கியவாறு காட்சி அளிக்கின்றார். சர்வதேச மகளிர் தினம் கொண்டாடும் பெண்மணிகள் சற்று ஒரு கணம் சிவத்தமிழ் செல்வி அம்மையாரையும் இன்றைய தேர் விழாவில் சிந்திக்க வேண்டும். ஏனெனில் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரே பெண்கள் தேர் இழுக்க வடம் பிடித்துக் கொடுத்தவர்.

**கா. சிவபாலன்**

கோயில்களிலே பெண்கள் திருமுறைகள் ஓத இடம் பிடித் துக் கொடுத்தவர். காரைக்கால் அம்மையாரையும் , திலக வதி யாரையும் மங்கையற் கரசியாரையும் பெரிய புராணத்தில் சிந் திக்கின்றோம். நம் நாட்டிலே கோயில்மணியம் பெண் தெய்வ வழிபாட்டில் பாரம்பரியத்தில் முதன்மையானவர் இவரே. கொற்றவையான துர்க்காதேவி சித்திர தேரிலே பவனி வரும் இன்றைய நாளில் அடியார்களின் துன்பங்களை நீக்கி திரு வருள் சுரக்கப் பிரார்த்திப்போமாக.

# இந்தியாவின் அழுத்தங்களுக்கு இணங்கினால் தாய்நாட்டைக்காக்க எதையும் செய்வோம்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

இந்திய அழுத்தங்களுக்கு இணங்கி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டால், தாய் நாட்டை பாதுகாப்பதற்காக எதனைச் செய்வதற்கும் தான் தயங்கப் போவதில்லை என ஜே.வி.பி. மீண்டும் அரசை கடுமையாக எச்சரித்திருக்கின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி, பொலிஸ் மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அது தனி நாட்டுக்கு அல்லது நாடு பிளவுபடுவதற்கே வழி வகுப்பதாக அமையும் எனவும் ஜே.வி.பி. தெரிவிக்கின்றது.

பொலிஸ் அதிகாரம் எந்தவொரு மாகாண சபைக்கும் வழங்கப்பட்டால் அந்த மாகாணத்தின் பொலிஸ் மத்திய அரசின் பொலிஸ் மா அதிபரின் கீழ் செயற்படாது எனவும் ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா தெரிவித்திருக்கின்றார்.

தென்மாகாணத்திலுள்ள தங்காலை நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனை தெரிவித்த அவர் தனது உரையில் மேலும் முக்கியமாக குறிப்பிட்டதாவது; ராஜீவ்காந்தி–ஜெயவர்த்தன உடன்படிக்கையை அல்லது அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது ஒரு தனி நாட்டுக்கான அத்திபாரமாக அமையும்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்காகவும், வவுனியா நகர சபைக்காகவும் நடை பெற்ற தேர்தல் தொடர்பாக குறிப்பிட்ட ரில்வின் சில்வா, இவை எதுவும் அவசரமானவை அல்ல. இந்தப் பகுதியில் உள்ள தமிழ் சமூகத்தினர் பயங்கரவாதம் மற்றும் பிரிவினை வாதத்துக்கு நெருக்கமாக கொண்டு செல்லப்பட்டனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் 12வீத மானவர்களே வடக்கு–கிழக்கு பகுதிகளில் உள்ளனர். இருந்த போதிலும் அவர்களிடம் நாட்டின் நிலப்பகுதியில் 33 வீதமும் கடற் பகுதியில் 61 வீதமும் உள்ளது.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் அவர்களில் 55 வீதமானவர்கள் வடக்கு–கிழக்கு பகுதிக்கு வெளியிலேயே வசிக்கின்றார்கள். வடக்கு–கிழக்கு பகுதியில் உள்ளவர்களுடன் ஒப்பிடும் போது தென்பகுதியில் உள்ள தமிழர்கள் சொகுசாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு இரண்டு வழிகளைத்தவிர வேறு வழிகளில் அரசினால் தீர்வை நாடமுடியாது. இந்த இரண்டு மாகாணங்களிலும் வசிப்பவர்களுக்கு உண்மையான ஜனநாயக உரிமைகளை வழங்கவேண்டும். தமிழர்களை சமத்துவத்துடன் நடத்த வேண்டும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு அமைப்புகளினால் போர் வீரர்கள் கௌரவிக்கப்படும் போது இரண்டு போர் வீரர்கள் கௌரவிக்கப்படும் முறை கேள்விக்குரிய தாகவே இருக்கின்றது.

தற்கொலைத்தாக்குதல் ஒன்றில் இருந்து ஆச்சரியப் படத் தக்கவகையில் தப்பித்துக் கொண்ட முன்னாள் தரைப் படைத் தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் கடற்படைத்தளபதி ஆகிய இருவரும் இவ்வாறான நிகழ்வுகளில் நடத்தப்படும் முறை கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களுடன் வந்த கப்பல்கள் பலவற்றை அழித்து அவர்களை பலம் இழக்கச் செய்த முன்னாள் கடற்படைத்தளபதியை அரசு நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளராக நியமித்திருக்கின்றது. இது தானா அவரை கௌரவிக்கும் முறை எனவும் ஜே.வி.பி. செயலாளர் கேள்வி எழுப்பினார். (ச–5)

# கிழக்கில் குடித்தொகைப் பரம்பலை மாற்றி அமைக்க திட்டமிட்ட சதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் குடித்தொகைப் பரம்பலை மாற்றி அமைவதற்கான ஒழுங்காக திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார். வெருகலில் மீள்குடியமர்தப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் 5 நாட்களில் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே ஹக்கீம் இதனைக் கூறினார்.

வெருகலில் மீள்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் அங்கு குடியமர்வதற்குத் தேவையான முறையான அனுமதியைப் பெற்றிருக்காத காரணத்தாலேயே அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்றும் அவர்களுக்கு வசிப்பதற்கு வேறு இடங்கள் இருக்கின்றன என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அண்மையில் இச் சம்பவம் குறித்து விளக்கம் அளித்திருந்தார். (ச–5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### நம்பிக்கையும் வலிமையும்



எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன். பண்டைய மதங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று குறிப்பிட்டன. புதிய மதம் தன்னம்பிக்கை இல்லாதவனை நாத்திகன் என்று சொல் லுகிறது.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்தப்போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய் யாத போது தான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ ஒரு நாடோ தன் னம்பிக்கை இழந்த வுடனேயே அழிவு வருகிறது.

# ஈராக்கில் தொடரும் தீவிரவாத தாக்குதல்கள்

ஈராக்கில் சனிக்கிழமை இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல்களில் உள்ளூர் அரசியல்வாதி மற்றும் சிறுவன் ஒருவன் உட்பட 23 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர். ரமழான் நோன்புக்காலம் ஆரம்பித்ததையடுத்து ஈராக்கில் இடம்பெற்ற மிக மோசமான



தாக்குதல்களாக இவை விளங்கு கின்றன.

திக்ரித்தின் வடக்கே, அல் ஷர்க்கத்தில் உள்ள பொலிஸ் தளத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதலில், 6 பொலிஸ் உத்தியோகத்தர்களும் 10 வயது சிறுவன் உட்பட 6 பொதுமக்களும் பலியாகினர்.

அத்துடன் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 13 பொலிஸ்உத்தியோகத்தர்கள்உட்பட25பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள் ளனர்.

இத்தாக்குதல் இடம்பெற்று ஒரு சில மணித்தியாலங்களில் சிரிய எல்லைக்கு அருகேயுள்ள சின்ஜாரில் சந்தையொன்றில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 4 பேர் பலியானதுடன் 23 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ந்து பலஜாவில் அல் - டஸ்ரூர் கட்சியின் உள்ளூர் தலைவ ரான காலெத்கனாம் அல் - ஸவ்பாரி பயணம் செய்தகா ரின் அடியில் பொருத்தப்பட் டிருந்த குண்டு வெடித்ததில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

அத்துடன் இந்தச் சம்பவத்தில் தெருவில் சென்று கொண்டிருந்த ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

அதேசமயம் தியலா மாகாணத்திலுள்ள பகுபா நகரின் கிழக்கேயுள்ள பொலிஸ் சோதனைச் சாவடி யொன்றில் துப்பாக்கிதாரிகள் நடத்தியதாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒரு வரும் பொது மகன் ஒருவரும் பலியானதுடன் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.

மேலும் தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் படைவீரர் ஒருவர் பலியானதுடன் அவரது சகாவான படைவீரர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

பக்தாத்தின் ஜடிடா பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த குண் டொன்று வெடித்ததில் இருவர் பலியானதுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர். (ஓ-6)

# நாசாவின் டிஸ்கவரி விண்கலம் 7 விண்வெளி வீரர்களுடன் பயணம்

அமெரிக்க நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் டிஸ்கவரி விண்கலமானது 7 விண்வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது.


புளோரிடா மாநிலத்திலுள்ள கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து சர்வதேச நேரப்படி சனிக்கிழமை 3.59 மணிக்கு இந்த விண்கலம் ஏவப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த விண்கலத்தை விண்ணுக்கு ஏவ எடுத்துக் கொண்ட இரு முயற்சிகள் தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான 30 ஆவது பயணமாக உள்ளது. இந்த விண்கலத்தில் விஞ்ஞான உபகரணம், ஆராய்ச்சி மாதிரிகளை சேமித்து வைப்பதற்கான குளிர்சாதனப் பெட்டி, உறங்குவதற்கான புதிய அறை, வளியை சுத்தமாக்கும் முறைமை மற்றும் விண்வெளி வீரர்களுக்கான நடை பயிற்சி உபகரணம் என்பன எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏவப்பட்டு எட்டரை நிமிடங்களில் பூமியின் சுற்று வட்டப் பாதைக்குள் நுழைந்த இந்த விண்கலம், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சர்வதேச விண்வெளி நிலையத்தை நெருங்கியதாகக் கூறப்படுகிறது.

டிஸ்கவரி விண்கலத்தின் இந்த 13 நாள் பயணத்தின்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் விஞ்ஞான உபகரணங்களை பொருத்துவதிலும் எதிர்வரும் வருடம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு எடுத்துச் செல்லப் படவுள்ள புதிய பாகங்களுக்கான தளங்களை



தயார்படுத்துவதிலும் புதிய அமோனியா தாங்கியொன்றை பொருத்துவதிலும் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடவுள்ளனர்.

அமோனிய தாங்கியானது சர்வதேச விண்வெளி நிலையத்துக்குள்ளான வெப் பத்தை அகற்ற உதவும். டிஸ்கவரியில் பய ணம் செய்துள்ள அமெரிக்க விண்வெளி வீரர் நிகொலிஸ்டொட் சர்வதேசவிண்வெளிநிலையத்தில் மூன்று மாத காலங்களுக்கு தங்கிப் பணிபுரியவுள்ளார்.

அதே சமயம் 6 வார காலமாக மேற் படி சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணியாற்றும் விண்வெளி வீரர் ரிம் கொய்ரா இவ் விண்கலத்தில் பூமிக்கு திரும்பவுள்ளார். (ஓ-6)

# கொலம்பியா அதிபருக்கு பன்றிக்காய்ச்சல்

(போகோடா)



பன்றிக்காய்ச்சல் நோய் கொலம்பியா நாட்டிலும் வேகமாக பரவியபடி உள்ளது. அந்த நாட்டில் இதுவரை 621 பேர் பன்றி காய்ச்ச லால் பாதிக்கப்பட்டுள்ளனர். 26 பேர் உயரி ழந்துள்ளனர்.

இந்த நிலையில் கொலம்பியா நாட்டு அதிபர் அல்வரோயுரிபி பன்றிக்காய்ச்சல் தாக் குதலுக்கு உள்ளாகி இருக்கிறார். கடந்த வெள் ளிக்கிழமை அவருக்கு காய்ச்சல், ஜலதோ ஷம் தலைவலி ஏற்பட்டது.

அதிபர் மாளிகையில் தங்கி ஓய்வு எடுத்த அவரிடம் வெள்ளி இரவு இரத்த மாதிரி எடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அப்போது அதிபர் அல் வரோக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆஜென்டீனா நாட்டில் சமீபத்தில் தென் அமெரிக்கா நாடுகளின் தலைவர்கள் கூட்டம் நடந்தது. இதில் அதிபர் அல்வரோ கலந்து கொண்டார். அப்போது யார் மூலமோ அவ ருக்கு பன்றிக்காய்ச்சல் பரவி உள்ளது. இதைய டுத்து அதிபர் மாளிகையில் அவர் தனிமை யில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள் ளதாக கொலம்பியா நாட்டு மந்திரிடிகோ பல சியோ தெரிவித்தார்.



ஆஜென்டீனாவில் நடந்த மாநாட்டில் அதி பர் அல்வரோ எந்தெந்த நாட்டு தலைவர் களை சந்தித்துப் பேசினாரோ அவர்கள் அனை வரும் உஷாராக இருக்கும்படி கொலம்பியா நாட்டு ,அதிகாரிகள் முன் எச் சரிக்கை தகவல் களை அனுப்பி உள்ளனர். (ஓ-6)

# கமரூன் நாட்டில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் ஐவர் பலி

கமரூனின் தலைநகரில் சனிக்கிழமை இடம்பெற்ற புகையிரத விபத்தில் குறைந்தது 5பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

நாகோன்டர் நகரிலிருந்து சுமார் ஆயிரம் பேருடன் பயணித்த இந்தப் புகையிரதமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் மேற்படி புகையிரத விபத்துக் கள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ள அந் நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் இறந்தவர்களின் தொகை மென்மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இதற்குமுன் தலைநகரில் வெள்ளிக்கிழமை எரிபொருள் புகையிரதமொன்று தடம் புரண்டு தீப்பற்றி எரிந்ததில் குறைந்தது ஒருவர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஓ-6)

# இந்தியா மீது தாக்குதல் நடத்த திட்டம் அமெரிக்கா புகாருக்கு பாகிஸ்தான் மறுப்பு

(இஸ்லாமாபாத்)

அமெரிக்கா தயாரிப்பான ஹர்பூன் வகை ஏவுகணைகளை பாகிஸ்தானுக்கு விற்று வருகிறது. இவற்றில் 165 ஏவுகணை களை பாகிஸ்தான் வாங்கியிருந்தது.

இவை கடற்படைக்கு பயன்படுத்தக்கூடியதாகும். ஆனால் பாகிஸ்தான் இந்த ஏவுகணைகளை தரையில் இருந்து தரையைத் தாக்கும் வகையில் மாற்றி அமைத்திருந்தது. அவற்றை இந்தியாவை தாக்கும் வகையில் குறி பார்த்து நிறுத்தியிருந்தது.

அமெரிக்காவுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் படி ஏவுகணைகளில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது . ஆனால் அதையும் மீறி மாற்றம் செய்திருந்தது.

இதை அமெரிக்கா கண்டுபிடித்துவிட்டது. இது பற்றி அமெரிக்கா வெளியிட்டுள்ள தகவலில் இந்த ஏவுகணையை மாற்றி அமைத்துள்ள பாகிஸ்தான் இந்தியா மீது தாக்குதல் நடத்த தயாராகி வருவதாக கூறியிருந்தது. இதற்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஏவுகணையை மாற்றி அமைக்க வில்லை. இந்தியாவைத் தாக்க அவற்றை தயார்படுத்தவில்லை என்று பாகிஸ்தானால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# ஜப்பானில் 54 ஆண்டுகளுக்குப் பின் எதிர்க்கட்சி ஆட்சியைக் கைப்பற்றுகிறது

## கருத்துக்கணிப்பு தெரிவிப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் 54 ஆண்டுகளாக லிபரன் ஜனநாயகக் கட்சி ஆட்சியில் இருந்து வருகிறது. சாடோப் டாரா சுசோ பிரதமராக இருக்கிறார் அங்கு பாராளுமன்றத் தேர்தல் பிரதிநிதிகள் சபை கடந்த சனிக்கிழமை நடந்தது. ஆளும் கட்சியான லிபரன் ஜனநாயகக் கட்சியும் எதிர்க்கட்சியான ஜப்பான் ஜனநாயகக் கட்சியும் போட்டியிட்டன.

நேற்று முதல் வாக்குகள் எண்ணும் நடவடிக்கை ஆரம்பமானது . ஆனால் அதிகார பூர்வமாக எந்த அறிவிப்பும் வெளி வரவில்லை. ஆனால் அங்குள்ள தொலைக்காட்சிகள் வாக்களித்தவர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.அதில் ஆளும் கட்சியான லிபரன் ஜனநாயகக்கட்சி படுதோல்வியடையும். எதிர்க்கட்சியான ஜப்பான் ஜனநாயகக்கட்சி பெரும் வெற்றி அடையும் என்று கூறப்பட்டுள்ளது.

ஜப்பானில் மொத்த தொகுதிகளின் எண்ணிக்கை 480 இதில் 308 இடங்களுக்கு மேல் ஜப்பான் ஜனநாயகக்கட்சி பிடிக்கும். ஆளும் கட்சியான் லிபரன் ஜன நாயகக் கட்சிக்கு 119 இடங்களே கிடைக்கும் என்று கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது.

இதனால் 54 ஆண்டுகளாக பதவியில் இருந்துவரும் லிபரன் ஜனநாயகக் கட்சி ஆட்சியை இழக்கிறது. எதிர்க்கட்சி ஆட்சியைப் பிடிக்கிறது. 2ஆம் உலகப் போர் முடிந்து




ஜப்பான் சீரழிந்து கிடந்த நேரத்தில் 1955ஆம் ஆண்டு லிபரன் ஜனநாயகக்கட்சியை மக்கள் அமோக ஆதரவு அளித்து வெற்றி பெறச் செய்தனர்.

அடுத்து தொடர்ந்து அந்தக் கட்சிக்கே ஆதரவு அளித்துவந்த மக்கள் இப்போது எதிர்க்கட்சிக்கு ஆதரவாக மாறியுள்ளனர்.

ஜப்பானில் சமீப காலமாக பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏராளமானோர் வேலை வாய்ப்புகளை இழந்தனர். இதனால் ஆளும் கட்சி மீது வெறுப்பு ஏற்பட்டு எதிர்க் கட்சிக்கு ஆதரவு அளித்துள்ளனர். எதிர்க்கட்சி வெற்றி பெறுவதால் அதன் தலைவர் யுகியோ ஹதோய மா புதிய பிரதமராகவுள்ளார். கருத்துக்கணிப்பில் ஆளும் கட்சி தோல்வி அடையும் என்று கூறப்பட்டதையடுத்து பிரதமர் டாரோ சுசோ தோல்வியை ஏற்றுக்கொள் வதாக அறிவித்துள்ளார். கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாகவும்அறிவித்துள்ளார். (ஓ-6)

# சம்பியன்ஸ் கோப்பை வெல்லுமென பாகிஸ்தான் அணி மீது எதிர்பார்ப்பு

## துணைத்தலைவர் அப்ரிடி தெரிவிப்பு



(கராச்சி)

"உலக கோப்பை இருபது -20 கிரிக்கெட் தொடரில் வென்றதன் மூலம், சம்பியன்ஸ் தொடறிலும் கோப்பை வெல்ல பாகிஸ்தான் அணி மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது'' என அந்த அணியின் துணைத் தலைவர் சயிட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 5 ஆம்திகதி வரை சம்பியன்ஸ் (மினி உலக கோப்பை) கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

இதில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட எட்டு அணிகள் பங்கேற்கின்றன. சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த இருபது -20 உலக கோப்பை தொரில் பாகிஸ்தான் அணி கோப்பை வென்று சாதித்தது.

இதன்மூலம் சம்பியன்ஸ் தொடரிலும் பாகிஸ்தான் அணி கோப்பை வெல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து பாகிஸ்தான் அணியின் சகல துறை வீரர் அப்ரிடி கூறியதாவது, இங்கிலாந்தில் நடந்த இருபது-20 உலகக் கோப்பை வென்றதன் மூலம் சம்பியன்ஸ் டிராபி தொடரில் பாகிஸ்தான் அணி கோப்பை வெல்லும் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த எதிர்பார்ப்பு போட்டியில் எங்களுக்கு நெருக்கடியாக அமையலாம்.

இருப்பினும், இக்கட்டான நேரங்களில் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் கோப்பை வென்று அசத்தலாம். இத் தொடரில் நடக்கும் ஒவ்வொரு போட்டியையும் நொக்-அவுட் போட்டியாக நினைத்து விளையாடினால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தலாம் என நினைக்கிறேன்.

இருபது-20 போட்டிக்கு தலைவராகப் பொறுப்பு, ஒருநாள்போட்டியில் துணைத் தலைவராகப் பொறுப்புக்கு கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இருப்பினும் துடுப்பாட்டம், பந்து வீச்சில் முழுத்திறமையை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் போட்டியில் அணித்தலைவர் பங்கேற்காத போது அணியை சிறப்பாக வழிநடத்துவேன் என்ற நம்பிக்கை உள்ளது. அணியில் கிடைத்துள்ள தலைவர் மற்றும் துணைத்தலைவர் பொறுப்புபை விட சிறந்த வீரராக தொடர விரும்புகிறேன். இவ்வாறு அப்ரிடி கூறினார்.

## இந்திய அணியின் பயிற்சியாளர் கிரிஸ்டனின் ஒப்பந்தம் நீடிப்பு?

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவை சேர்ந்த கேரி கிரிஸ்டன் இருந்து வருகிறார்.

2ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட அவரது பயிற்சி காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிபடைகிறது.

இந்த நிலையில் அவரது செயல்பாடு திருப்தி அளிக்கும் வகையில் உள்ளதால் அவருடனான ஒப்பந்தத்தை 2011 ஆம் ஆண்டு உலக கிண்ண தொடர் வரை நீடிக்க இந்திய கிரிக்கெட் சபை முடிபு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அமெரிக்க ஓபனை வெல்வேன்

## செரீனா சபதம்

(நியூயோர்க்)



அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் பட்டம் வெல்வேன் என்று அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நியூயோர்க்கில் நிருபர்களுக்கு செரீனா அளித்த பேட்டியில் 2009 ஆண்டிற்கான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நேற்று ஆரம்பமானது.


இந்தத் தொடரில் நான் நிச்சயம் பட்டம் வெல்வேன். எத்தனை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றேன் என்பது எனக்கு முக்கியமல்ல. பில்லி ஜீன் கிங் இதுவரை 12 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். அவருடைய சாதனையை எட்டிப் பிடிக்க வேண் டும் என்பதே எனது ஆசை. இது வன்ர 11 பட்டங்களைக் கைப்பற்றியுள்ளேன் என்றார் அவர்.

# டெஸ்ட் சம்பியன் தொடருக்கு இந்தியா முட்டுக்கட்டை

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை "டெஸ்ட் சம்பியன் தொடர் நடத்தும் திட்டத்தை இந்தியக் கிரிக்கெட் சபை எதிர்த்ததால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதாக மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட்சபை தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபைத் தலைவர் ஜூலியன் ஹன்டே அளித்த பேட்டியில், 2012 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் வருங்கால போட்டி அட்டவணை முறையில் மாற்றம் செய்யவும் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை டெஸ்ட் உலக சம்பியன் போட்டியையும் நடத்த சர்வதேச கிரிக்கெட்சபை முயற்சி மேற்கொண்டது.

இதற்கு இந்திய கிரிக்கெட்சபை எதிர்ப்புத் தெரிவித்ததால் இந்தத் திட்டம் கைகூடாமல் போய்விட்டது. போட்டி அட்டவணை நிர்ணயிப்பது உட்பட பல விடயங்களில் வணிகரீதியாக வலிமை கொண்ட 4 சபைகளின் கையில் தான் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.



யு. எஸ். ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நேற்று ஆரம்பமானது. நியூயோர்க்கில் நடந்த கண்காட்சிப் போட்டியில் பங்கேற்ற (இடமிருந்து) பெடரர், ரோடிக், ஷரபோவா, செரீனா

# இலங்கை- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்டின் முக்கிய பதிவுகள்

**இலங்கை-நியூஸிலாந்து அணிக ளுக்கு இடையில் எஸ்.எஸ்.சி. மைதா னத்தில் நேற்று முன்தினம் முடிபடைந்த இரண்டாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியின் முக்கிய அம்சங்கள் சில,**

★ இலங்கை அணி 2-0 என்ற கணக்கில் தொடரை வென்றதானது அது நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஒன்றை முழுமையாக கைப்புற்றும் முதல் சந்தர்ப்பம் ஆகும். இதற்கு முன்னர் இலங்கை 1-0 என்ற கணக்கில் இரண்டு முறை நியூசிலாந்தை வீழ்த்தியுள்ளதோடு 2-1 என்ற கணக்கில் ஒரு தடவை தொடரை வென்றுள்ளது.

★ கடைசி நாளில் அபாரமாக ஆடிய நியூசிலாந்து அணி போட்டியின் 4ஆவது இன்னிங்ஸுக்காக 397 ஓட்டங்களைப் பெற்றதானது இலங்கை மண்ணில் 4 ஆவது இன்னிங்ஸுக்காக பெறப்பட்ட அதிக பட்ச ஓட்டங்களாகும். முன்னர் கடந்த ஜூலை மாதம் இதே எஸ்.எஸ்.சி.மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி நான்காவது இன்னிங்ஸுக்காக 4விக்கெட் இழப்பிற்கு 391 ஓட்டங்களைப் பெற்றதே அதிகமாக இருந்தது.

★ பொறுப்புடன் ஆடிய டானியல் விக்டோரி நேற்று முன்தினம் 140 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் அவர் டெஸ் போட்டிகளில் தனது அதிக பட்ச ஓட்டங்களைப் பதிவுசெய்து கொண்டார். கடந்த 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஹெமில்டனில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விட்டோரி ஆட்டமிழக்காது 137 ஓட்டங்களைப் பெற்றதே முந்தைய அதிகபட்சமாக இருந்தது. விக்டோரி டெஸ்ட் அரங்கில் பெற்ற 4 ஆவது சதம் இதுவென்பது குறிப்பிடத் தக்கது.

★ இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார இரண்டாவது இன்னிங்ஸில் 20 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். இதன் மூலம் அவர் இலங்கைக்காக அதிக சதம் பெற்றோர் வரிசையில் அரவிந்த டி சில்வாவுடன் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துகொண்டார். இதில் மஹேல ஜெயவர்த்தன 26 சதங்களுடன் முதலி டத்தில் காணப்படுகின்றார்.

★ அதேபோன்று எஸ்.எஸ்.சி. மைதானத்தில் தொடர்ந்து சோபித்து வரும் மஹேல ஜெயவர்த்தனவுக்கு இரண்டாவது இன்னிங்ஸிலும் அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை. முதல் இன்னிங்ஸில் 92 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த அவர் இரண்டாவது இன்னிங்ஸில் 96 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து தனது 27 ஆவது சதத்தை மீண்டும் தவற விட்டார். இதன்மூலம் அவர் அதிகமுறை 90 களில் ஆட்டமிழந்த இலங்கை வீரர்கள் வரிசையில் ஹஷான் திலகரத்னவுடன் முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டார்.

இருவரும் 5 தடவைகள் 90களில் ஆட்டமிழந்தனர்.

★ இதில் மஹேல ஜெயவர்த்தன மற்றும் ஒரு சாதனை பக்கத்தில் தனது பெயரை இடம்பெறச் செய்தார். அதாவது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 90களில் ஆட்டமிழந்த 4 ஆவது வீரராக மஹேல ஜெயவர்த்தன பதிவானார். இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் கிளெம்ஹில் மற்றும் இங்கிலாந்தின் பிரான்க் வுல்லி ஆகியோர் தலா ஒருமுறை இரண்டு இன்னிங்ஸ்களிலும் 90களில் வெளியேறியுள்ளதோடு, மேற்கிந்திய வீரர் கோர்டன் கிரினிட்ஜ் இரண்டு போட்டிகளில் இவ்வாறு பரிதாபமாக ஆட்டமிழந்துள்ளார்.

★ அதிலும் 29 ஆண்டுகளுக்கு பின்னரே வீரர் ஒருவர் டெஸ்ட் போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 90 களில் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு முன் னர் கடைசியாக 1980 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கிரிஸ்சேச்சில் நடந்த நியூசிலாந்திற்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் வீரர் கோர்டன் கிரினிட்ஜ் முதல் இன்னிங்ஸில் 91 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததோடு 2 ஆவது இனிங்ஸில் 97 ஓட்டங்களுக்கு வெளியேறினார்.

★ இதனிடையே மஹேல ஜெயவர்த்தன மற்றும் குமார் சங்கக்கார இரண்டாவது இன்னிங்ஸில் 173 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றதன் மூலம் இலங்கைக்காக அதிக இணைப்பாட்ட ஓட்டங்களை பகிர்ந்து கொண்டவர்களாக சாதனை படைத்தனர். இருவரும் இது வரையில் 71 இன்னிங்ஸ்களில் ஜோடி சேர்ந்து 4548 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் போது இலங்கையின் முன்னாள் ஆரம்ப ஜோடியான மார்வன் அத்தபத்து மற்றும் சனத் ஜெயசூரிய இணைந்து பெற்ற 4533 இணைப்பாட்ட ஓட்ட சாதனையே முறியடிக்கப்பட்டது.

★ இதில் இருவரும் இணைந்து இரண்டாவது டெஸ்டில் பெற்றது 11 ஆவது இணைப்பாட்ட சதமாகும். இதன்மூலம் இலங்கைக்காக அதிக இணைப்பாட்ட சதங்களை பெற்ற அரவிந்த டி சில்வா மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோரின் சாதனையை சங்கக்கார, ஜெயவர்த்ன சமன் செய்தனர்.

★ அதேபோன்று இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் திலான் சமரவீர 25 ஓட்டங்களை பெற்றதன் மூலம் இந்த ஆண்டில் அதிக டெஸ்ட் ஓட்டங்களை பெற்றவராக சாதனை படைத்தார். திலான் சமரவீர 2009 ஆம் ஆண்டில் பெற்ற மொத்த ஓட்டங்களின் எண்ணிக்கை 1083 ஆகும். இதனால் இந்த ஆண்டில் 1071டெஸ்ட் ஓட்டங்களை பெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் அன்ட்ரூ ஸ்ரொரஸ் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

★ ஜீதன் படேல் இரண்டாவது இன்னிங்ஸில் 34 ஓவர்கள் பந்து வீசி 122 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இது அவ[illegible] டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் எதிரணிக்கு விட்டுக்கொடுத்த அதிக ஓட்டங்களாகும். இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதம் நெப்பியரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் படேல் 120 ஓட்டங்களை கொடுத்ததே அதிகமாக இருந்தது.

## ஜனாதிபதி-தமிழ்க் கூட்டமைப்பு...

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க வேண்டும் என ஜனாதிபதி ஏற்கனவே விடுத்திருந்த வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசியல் தீர்வு திட்டத்தை முன்வைக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் கூறின.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களை உடனடியாக மீளக்குடி யேற்றம் செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் விளக்கமளிப்பார்கள் என்றும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சந்திப்பில் மேலும் பேச வேண்டிய விடயங்கள் குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு இந்த வாரம் கூடி ஆராயும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நாட்டின் இனப் பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உதவுவதற்கு தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள 3 இலட்சம் மக்களையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் மீளக்குடியமர்த்துவதே தற்போதைய முக்கிய தேவை என்றார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

நாட்டைப் பிரிக்காமல் அனைத்து சமூகங்களும் மதிப்புடன் வாழத்தக்க அடிப்படைத் தீர்வு ஒன்று இருக்க வேண்டும்.

அத்தகைய அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வ தற்கு ஜனாதிபதிக்கு உதவி செய்ய ஆதரவு அளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ச-5)

## ஐ.நா.செய...

விக்கவில்லை என்று கூறப்பட்டு வரும் நிலையில் பான்கீமூனின் கவனத்தை இது தொடர்பில் ஈர்க்க நோர்வே முன்வந்திருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

வீடியோக்காட்சி குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என எரிக்சொல்ஹெய்ம் முன்னரும் வலியுறுத்தி யிருந்தார். எனினும் இலங்கை அரசு அதற்கு தனது பலமான கண்டனத்தை தெரிவித்திருந்தது. இது குறித்து இலங்கை விசாரணைகளை நடத்த வேண்டும் என பிரித்தானியா எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் எவையும் அந்தக் வீடியோ குறித்தோ, வன்னியில் ஐ.நாவின் பராமரிப்பில் உள்ள முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 3இலட்சம் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதே குறித்து இதுவரையும் எத்தகைய கலந்துரையாடலுக்கும் அழைக்க வில்லை என்றும் ஜோன்சவார்ஸ் சுட்டிக்காட்டினார். இதற்கிடையே இந்த வீடியோக் காட்சி குறித்து ஐக்கிய நாடுகள் சபை நாயகம் பான் கீ மூன் இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்க வில்லை. அவரது அலுவலகம் தொடர்ந்தும் அமைதி காத்து வருகின்றது.

நோர்வே அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு இலங்கை கடும்போக்குத்தனத்துடன் பதிலளித்த விதம் அல்லது வேறு ஏதோ ஒன்று பான்கீமுனை அமைதியாக்கி வைத்திருக்கி ன்றது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஜனாதிபதி...

இடம்பெறவுள்ளன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்படலிபியாவின் நட்புறவு நாடுகளின் பல தலை வர்கள் இந்தநிகழ்வில் கலந்துகொள்ள வுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஊடகவியலாளர் திஸ்ஸ...

எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதிக்கும் 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதிக்கும் உட்பட்ட காலப்பகுதியில் பிரஸ்தாப குற்றங்கள் புரிந்துள்ளதாக அவர்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 6 ஆம் திகதி திஸ்ஸ நாயகம் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். நோர்த் ஈஸ்ரேர்ன் என்ற சஞ்சிகை வெளியிட்ட அச்சக உரிமையாளர் என்.யசீகரன் மற்றும் அவரது மனைவி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டபின் அவர்களை பார்வையிட பொலிசுக்கு சென்றபோது திஸ்ஸநாயகம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்.

பலமாத காலமாக பொலிஸ்தலைமைய கத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த திஸ்ஸநாயகம் பின்னர் கொழும்பு உயர் நீதிமன்ற தீர்ப்பொன்றை அடுத்து கடந்த மே மாதம் 16ஆம் திகதி தொடக்கம் கொழும்பு சிறைச் சாலைக்கு அனுப்பி விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

இவரால் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரணசிங்க என்பவருக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயேட்சையாக வழங்கப்பட்டதென கொழும்பு மேல்நீதிமன்றம் ஏற்கனவே தீர்மானித்து அதனை அடிப்படையாக கொண்டு திஸ்ஸநாயகத்துக்கு எதிரான வழக்கை விசாரணை செய்தது.

இதன்படி வழக்கு எ
செய்த கொழும்பு மேல்
நீதிபதி தீபாலி விஜேசுந்
நாயகத்தின் மூன்று கு
களுக்கும் 20 வருட கடூ
தண்டனை விதித்து தீர்ப்
னார்.

திஸ்ஸநாயகம் சார்
ரான சட்டத் தரணி அனில்
கருத்து தெரிவிக்கையில்
யகம் ஒரு இனவாதி அ
றும் சிங்கள மக்களுக்கு
வகையில் பல்வேறு
களுக்கு அவர் தலைமை
ள்ளதாகவும் சுட்டிக்காட்டி

அரசியல் அமைப்பில்
வெளியிடும் சுதந்திரம்
இன,மத ரீதியின்றியும்
மின்றியும் நியாயமான
க்கு விசாரணைக்கு அதி
ங்கி யுள்ளபோதிலும் அ
ரான வழக்கில் இந்த நியா
கப்பட்டதா என்பது ஒரு கே
யான விடயம் என்றும் சு
அனில் டி சில்வா நீதிம
நேற்று வெளிப்படையாக
தார்.

இவ்வழக்கின் தீர்ப்
தானிக்க பெருந்திரளான
யாளர்கள் மற்றும்
தூதரக உத்தியோகத்தர்க
ம்பு மேல் நீதிமன்றத்து
மளித் திருந்தமை குறிப்பி

இதேவேளை பயங்
தடைச் சட்டம் 1982 ஆம்
நடைமுறைக் குக் கொண்
டதை அடுத்து அதன் கீழ்
கப் பட்டுள்ள முதல் நபர் தி
என்பது குறிப்பிடத்தக்கது

## 15 பல்கலைக் கழகங்...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி மாலினி பீரிஸ், மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, தரமேம்பாட்டு (IRQ) இணைப்பாளர் பேராசிரியர் எல்.எல். ரட்ணாயக்க, யாழ். அரச அதிபர் க. கணேஷ், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இக் கருத்தரங்கில் பல்கலைக் கழகங்களின் தரமேம்பாடு குறித்து பேராசிரியர் எல்.எல்.ரட்ணாயக்க கருத்துரைக்கையில்;

நாட்டிலுள்ள 15 பல்கலைக்கழங்களின்தர மேம்பாட்டுக்கு என உலக வங்கி ஆயிரத்து 700 மில்லியன் ரூபாய் நிதியை உதவியாக வழங்கின்றது.

இதன் மூலம் பல்கலைக்கழகங்களின் பௌதிக வளங்களின் உட்கட்டமைப்பு, கல்விசார் மற்
வர்களின் ஆங்கில தொழி
உட்பட பல்துறைகளின்
கள் ஏற்படுத்தப்படும். இத்தி
யாழ்ப்பாணப் பல்கலைக்
தின் கலைப்பீடம் மேம்ப
படுமெனவும் பேராசிரியர்
க்க குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழ
பொறியியல் பீடம் அ

இந்நிகழ்வில் கருத்து
கிய பேராசிரியர் பொ. பால
பிள்ளை தெரிவித்ததாவது

யாழ். பல்கலைக்க
பொறியியல் பீடத்தை அ
பது அவசியம் அப்போ
யாழ். மாவட்டத்தின் கைத்
வளர்ச்சி இடம்பெற முடிய
துடன் கல்வித் தரம் குறைந்
ன்றது என்பதை நான் ம
றேன். கல்வி தரத்தில் ஓரள
வு ஏற்பட்டுள்ளதே தவிர தர
வதாக கூறுவது தவறு என்ற

## சகல...

இந்நிலையிலேயே இர்
ராட்சி மன
க்கான
களை இர
இறுதிக்கு
வேண்டு
ஜனாதிபதி
ராஜ பக்
தான் வி
கோரிக்கை
கவிருப்பத
ச்சர் தெரி
கின்றார்.

அடுத்
இரண்டு
காலப் ப
குறைந்த
ஆயிரம்
களையாக
ப்பாணத்
குடி யேற்
யாழ். மாநக
க்கு முஸ்லி
வரைபிரதிந
வாக நிய
தொடர்பாக
வதற்கு தா
ராக இருப்
வும் அமைச்
ளஸ் தேவா
தெரிவித்தா


# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

## DAY CLASS
## 2010 A/L

(2009 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களிற்குரியது)

✱ கணித, உயிரியற்பிரிவு ✱

திங்கள் தொடக்கம் வெள்ளிவரை

BIOLOGY :- திரு. T. கெங்காதரன்
:- வழமையான ஆசிரியர்
:- திரு. M.M. அல்போன்ஸ்

COM.MATHS :- திரு.S. செந்தில்ராஜ்
:- திரு.P. செந்தில்நாதன்
:- திரு. குணம்

PHYSICS :- திரு. R. குகன்
:- திரு.S.சோதிலிங்கம்

CHEMISTRY :- திரு.K.சிவத்திரன்
:- திரு.N.மகேஸ்வரன்

ஆரம்பம்:- 01.09.2009
இன்று காலை 7.30 A.M

(C-3217)

# தொழிற் பயிற்சிகள்

எங்கள் நிறுவனத்தில் தொழிற்கல்விகளை பயில்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்

☆ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
★ றேடியோ ★ வீடியோ டெக் ★ DVD Player
★ ரெலிவிசன் ★ CD Player ★ Amplifier
காலம்:-10மாதம்

☆ Mobile Phone Repairing
Hard ware — Hard ware Repairing
Soft ware — Phone Lock
காலம்:-3மாதம்

☆ ஏயார் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:-6மாதம்

☆ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங் காலம்:-6மாதம்

☆ Diploma in computer Hard ware Engineering காலம்:-3மாதம்

குறிப்பு: சகல பயிற்சிகளுக்கும் 6 மாதம் முதல் 10 மாதம் வரை முழு நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். (C-3214)

விபரங்களிற்கு, பயிற்சிகள் ஆரம்பம் :06/09/2009

JAFFNA TECHNICAL INSTITUTE
No.45, [illegible] வீதி(பெருமாள் கோவில் முன் வீதி),
யாழ்ப்பாணம். T.P:- 021 222 6434, 0718561654

# சேவை

✱ றேடியோ ✱ ரெலிவிசன் ✱ வீடியோ டெக்
✱ அம்பிளி ✱ CD Player ✱ DVD Player
✱ Car Cassette Radio ✱ சலவை இயந்திரங்கள்

திருத்திக் கொடுக்கப்படும்.

குறிப்பு:-சகல எலக்ரோனிக் உதிரிப்பாகங்கள் கொழும்பிலிருந்து பெற்றுக்கொடுக்கப்படும்.

விபரங்களிற்கு:- NEW ASIAN CENTER
56/15, ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கி அருகாமை),
யாழ்ப்பாணம்.
T.P.:- 0718561654, 0779254078
(C-3215)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

மிகப்பிந்திய தொழில்நுட்பங்கள்
உலகின் முன்னணி நிறுவனங்களின்
வினைத்திறன் மிகு கற்கை நெறிகள்
வேலைவாய்ப்பு, சம்பந்தமான விபரங்கள்
நீங்களும் அறிய வேண்டாமா?

MOBILE NET MCS COMPUTER SERVICES

இலவச கருத்தரங்கு,இடம்: MCS விரிவுரை மண்டபம்
பதிவுகள் 03.09.2009 இற்கு முன் நேரில்
324,Palaly Road,Campus Junction,Jaffna,Bus Root-764

Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP


# மரண அறிவித்தல்



## டேவிட் அலெக்சாண்டர்
(லொயலாஸ் உரிமையாளர்)

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் இராஜேந்திரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் அலெக்சாண்டர் (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் டேவிட், டேவிட் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் றெஜினாவின் அன்புக்கணவரும் இக்னேசியஸ், லொயலா(பிரான்ஸ்), கிளன்சியஸ் லொயலா, மொறிசியஸ் லொயலா(பிரான்ஸ்), ஜெறின் அலெக்சியா (பிரான்ஸ்),ஜறின் சோபியா (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும் சியாமளா, கீதா (மக்கள்வங்கி, திருநெல்வேலி), திலக் ஆகியோரின் மாமனும், எறிக், எறின், றெஜிசியா, ஸ்ரெமி ஆகியோரின் பேரனும் அல்வின், தேவு, புவனா, குமார், செல்வக்குமார் மற்றும் காலஞ்சென்ற கிறேக்கரி தங்கராஜா, ரவி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/9, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
கிளன்சியஸ் லொயலா

(3353)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2009இல் அச்சிட்டு வெளியிட